# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

84-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1959-ம் ஆண்டு சித்திரை மாதம் 9-ந்திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 13-ம் இலக்கம்


# "நீங்கள் அஞ்சவேண்டாம் ஏனெனில்..."

திவ்வியயேசுவின் சீஷர்கள் கூட்டம் சிறியது. அவர்களின் விசுவாசம் அதிலும்மிகச்சிறியது. மூன்று வருடத் தொடர்பு அவர்களின்இதயத்தில் யேசுவின்மட்டிலே அன்பைப் பெருக்கிய போதிலும், அவரது சிலுவைமரணம் அன்பின் சாட்சியைச் சுருக்கிச் சீஷர்களைச் சித்தங்கலங்கச் செய்துவிட்டது. 'அப்போது சீஷரெல்லோரும் ஓடிப்போனார்கள்.' (மத். 26, 56.)

உம்மோடு சாகவேண்டுமானாலும் சாகத்தயார் என்று வீரம் பேசிய இராயப்பரும் "தூரத்திலேநின்று பிரதானஆசாரியனுடைய தலைவாசல்வரையில் அவரைப்பின்சென்றார்."

கல்லறைக் கல்லைப்புரட்டி, அதன்மேல்உட்கார்ந்திருந்த சம்மனசானவர் உத்தானஞாயிறன்று அதிகாலை யேசுவின்திருச்சடலத்தில் கந்தவர்க்கங்களைப் பூசுவதற்குச் சென்ற புண்ணிய ஸ்திரிகளைப் பார்த்து: "நீங்கள் அஞ்சவேண்டாம். ஏனெனில், நீங்கள் மரித்தோரிடம்தேடிவந்த அவர்உயிர்த்தார்,' என்றார்.

யேசுவின்உத்தானம் நமதுவிசுவாசத்தின் அஸ்திவாரம். 'யேசு உயிர்த்தெழாவிட்டால், நாங்கள் போதிப்பதுவீண், உங்கள் விசுவாசம்விழல்'என்கிறார் அர்ச். சின்னப்பர். நமது பாவங்களுக்காக மரித்து அடக்கஞ்செய்யப்பட்டவர் நமது இரட்சணியத்திற்காக உயிர்த்தெழுந்தார். மரணத்தின்மீது வெற்றிகொண்டார். இனிமேல் மரணம் அவரைத் தீண்டப்போவதில்லை. நாமும் உலகத்துக்குச் செத்தவர்களாகவும், அவரில் நிலைகொண்டவர்களாகவும் இருப்போமானால், அவருடையஉத்தானத்திலும் பங்குபெறுவோம். "நாம்ஞானஸ்நானத்தினால் கிறீஸ்துவின் மரணத்தில் அவரோடு அடக்கஞ்செய்யப்பட்டோம். அதாவது, எப்படிக் கிறீஸ்துநாதர் பிதாவின் மகிமைப்பிரபாவத்தால் மரித்தோரினின்று உத்தானமாயினரோ, அதேபோல்நாமும் புதுச்சீவியத்தில் நடமாடுவோமாக! ஆதலால், அவருடைய கற்பனைகளை அனுசரித்து, உலக ஆசாபாசங்களைஅடக்கி, அவருடைய மரணத்தில் ஒன்றிப்போமானால், நமதுசீவியத்தின் சம்பாவனையாக அவருடைய வெற்றிப்பிரதாபத்தில் பங்கடைவோம்." (உரோமை. 6, 6).

யேசுக்கிறீஸ்துநாதருடைய உத்தானத்தின் சாட்சிகளாக நின்ற அப்போஸ்தலர்கள் அவரது நாமத்தின்பொருட்டுத் துன்புறுத்தப்பட்டனர். அவர்கள் போதித்த திருச்சபையை முளையிலேயேகளைந்துவிடத் தீமையின் வல்லபம் முன்வந்தது. ஆனால், அப்போஸ்தலர்களின் செவிகளிலும், ஆதிக்கிறீஸ்தவர்களின் காதுகளிலும் "நீங்கள் அஞ்சவேண்டாம்" என்னும் மொழிகள் சப்தித்துக்கொண்டிருந்தன. அவர்களும் தங்கள்விசுவாசத்திற்காக நாவால்வர்ணிக்கமுடியாத சித்திரவதைகளுக் குட்பட்டனர். உயிரையும்தியாகஞ்செய்தனர்.

ஆரம்பமுதலே திருச்சபைக்கு எதிர்ப்பும், இடுக்கணும் இருந்துதான்வருகின்றன. ஆனால், எதிர்த்தோர் இருந்தவிடமேதெரியாது மறைந்துபோகச் சத்திய திருச்சபைமட்டும் வளர்ந்து வந்தது, இன்னும்வளர்ந்துகொண்டுவருகின்றது. ஆயிரம்கத்தோலிக்கரை அழிக்கும் அதேஇடத்தில் ஆயிரமாயிரம்கத்தோலிக்கர் தோன்றுகின்றனர்.

கிறிஸ்துவசகாப்தத்தின் முதல் மூன்று நூற்றாண்டுகள் ரோமை மன்னர்கள் திருச்சபையை முளையிலேயேகளைந்துவிட முனைந்து நின்றகாலம். திருச்சபைஎன்னும் கன்றைக் காலிசெய்துவிட்டதாகக் கர்வம்கொண்டான் நீரோ. ஆனால், காலியானதுயார்? நீரோவா? திருச்சபையா? பலஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்களைக் கொன்ற மதவெறிகொண்ட தியோக்கிளேசியன் எங்கே? பசியால்வாடி இறந்தான்.

4-ம் நூற்றாண்டிலே ஜூலியன் மன்னன் அமைத்தான் அழிவுப்படலம் திருச்சபைக்குஎதிராக. திருச்சபையை மறைத்துவிட்டதாக மனப்பால்குடித்தான். மறைந்ததுயார்? "ஏ, கலிலேயனே! நீயே வென்றாய்" என்று கதறிக்கொண்டே மாண்டான்.

உலகம் — ஐரோப்பாக்கண்டம் அப்போதுநடுங்கியதுநெப்போலியன்என்றால். ஆம், வல்லரசுகளை வாட்டிவிட்டதாக அவன் மனப்பால்குடித்தவன். திருச்சபையைத் துச்சமென மதித்தவன். 7-ம்பத்திநாதபாப்பாண்டவரைப் பதரென்று மதித்தவன். அந்தநெப்போலியன் நடுங்குகின்றான் ஹெலனாதீவில். "அலெக்சாண்டர், ஜூலியஸ்சீஸர், சாளி

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# அர்ச். சூசையப்பரின் சிறியநாய் அந்திரே பிறதர்

[இஃது சஞ்சூசையப்பர்சபைச் சந்நியாசர்களில் ஒருவராயிருந்து காலஞ்சென்ற சங். பி. இஞ்ஞாசிமுத்து, S. S. J. பிறதர்அவர்களால் தமிழாக்கஞ் செய்யப்பெற்றது.]

(முன்தொடர்ச்சி)

கல்லூரிமாணவன் ஒருவன் விஷசுரங்கண்டு அநேகநாளாய்ப் படுகிடையாய்க்கிடந்தான். ஓர் நாள் அந்திரேபிறதர் அவனைப் புன்சிரிப்போடுநோக்கி: "சோம்பேறிப்பையா, இங்கே என்ன செய்கிறாய்?" என்றார். "நான் வருத்தமாய்க் கிடக்கிறேன்; எழும்பப்படாதென்று டக்றர் கட்டளையிட்டிருக்கிறார்" என்றான் பையன். "உனக்கொரு வருத்தமுமில்லை; இதுபிள்ளைகள் இளைப்பாறி விளையாடும்நேரம்; நீயும் போய் விளையாடு"என்றார். பையனும் தான்சுகபெலம் உள்ளவனாயிருப்பதாக உணர்ந்து எழுந்து, உடைஅணிந்துகொண்டு பிள்ளைகளோடு சேர்ந்து துள்ளிக் குதித்து விளையாடினான். சகபாடிகளும், அவர்களைக் கண்காணித்துக்கொண்டுநின்ற ஆசிரியரும் பையனுக்குச் சடுதிப்போராக நேர்ந்த சௌக்கியத்தையும், சௌரியத்தையும் அவதானித்து ஆச்சரியமிகுதியால் அசைவற நின்று திகைக்கவேண்டியவர்களானார்கள். அந்திரேபிறதர் தமக்கு அடாததிலே தலையிட்டுப் பையனுக்கு அவிவேகமான கட்டளைகொடுத்ததாகக் கண்டிக்கப்பட்டபோது: "பையனுக்கு வருத்தம்ஒன்றுமில்லையே; வேண்டுமாகில் டக்றரை அழைத்துப் பரிசோதித்துப் பாருங்கள்" என்றார். டக்றர் ஒருமுறைக்குப் பலமுறைர வந்து, மீண்டும் மீண்டும் பரிசோதனை செய்து பார்த்தும் பையன் விஷசுரத்தால் பீடிக்கப்படாதவன் போலே சுகமும்பெலமும் உள்ளவனாயிருப்பதைக்கண்டு தாமும் பிரமித்து மலைக்கலானார்.

கொள்ளைநோயாகிய வைசூரியினால் கல்லூரிமாணவரும், துறவிகளும் காத்திராப்பிரகாரம் பீடிக்கப்பட்டுப் பழையதோர் நவசந்நியாசப் பரீட்சைநிவாசத்துக்குக் கொண்டுபோகப்பட்டார்கள். சிலர் அந்நோய்க்கு இரையாகிவிட்டார்கள். கல்லூரிச் சிரேஷ்ட குருப்பிரசாதியே அவர்களைப்பராமரிக்கவேண்டிநேர்ந்தது. அவருக்குத் துணைபுரிய அந்திரேபிறதர் அனுப்பப்பட்டார். அவர் தொற்றுநோயாளர் சாலையை அடைந்ததும், முழந்தாள்மடித்து அந்தத்தேவாக்கினையைநீக்கியருளும்படி அர்ச். சூசையப்பரை ஆவலாக மன்றாடிக்கொண்டார். அதன்மேல் எவரேனும் புதிதாக அக்குரூரநோயால் பீடிக்கப்பட்டதுமில்லை, ஏலவே பீடிக்கப்பட்டவர்கள் எவரேனும் இறந்ததுமில்லை.

1884-ம்ஆண்டு கார்த்திகை மாசம் ஓர்சனிக்கிழமையன்று அந்திரேபிறதர் தரிசகர் மண்டபத்தளத்தை உரிஞ்சிச்சுத்திசெய்துகொண்டுநிற்கையில் இருஆடவர் ஓர்ஸ்திரீயைக் கைலாகு கொடுத்துநடத்திவந்து"அந்திரேபிறதரே, இந்தஸ்திரீ உம்மோடு பேச ஆசிக்கிறாள்" என்றார்கள். அவர் அவளைநோக்கி: "அம்மா நானுனக்குச் செய்யத்தக்கதென்ன?" என்றார். நான்வாதநோயினாலே வாதைப்படுகிறேன்; என்னை நீர் குணப்படுத்தியருளவேண்டுமென்று வேண்டுகிறேன்"என்றாள். "அவளைநடக்கவிடுங்கள்"என்று பிறதர்சொல்ல, கூட்டிவந்தவர்கள் கைலாகுகொடாதுவிட்டுவிட்டார்கள். அவளும் சிறிதுதூரம் அடியெடுத்துவைத்து நடந்தாள். பிறதர் சற்றுநேரம்தமதுமுயற்சியைப்பார்த்துவிட்டு, "அம்மா உன்வாதநோய் தீர்ந்துவிட்டது, உன்வீட்டுக்குப் போ"என்றார். அவள் எவர்உதவியும் எவ்வளவேனும் தேவைப்படாதவளாய் வீடுநோக்கி வழிகொள்ளலானாள். இந்தஅதிசய ஆரோக்கியத்தைக் கண்ணாரக்கண்ட உடன்துறவி ஒருவர் "நாம் இச்சம்பவத்தை ஆணையிட்டுக் கூறப் பின்னிடையமாட்டோம்" என்று தெரிவிக்கலானார்.

இளமென்ற் என்னும் ஓர்குருவானவருடைய கண்பார்வை மங்கிமறைந்துகொண்டு போனமையால், அவரைப் பேராசிரிய பதவியில்நின்றுநீக்கி, இராசகுன்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## அர்ச். பத்தாம்பத்திநாத பாப்பானவர்
# வெனிஸ்நகர் திரும்புகின்றார்

அர்ச். பத்தாம்பத்திநாதர் வெனிஸ்நகரின் பத்திறியாக்குவாய் இருந்துவருகையில்தான் பாப்பானவராகத் தெரிவுசெய்யப்பெற்றார். தம்மைப் பாப்பானவராகத் தெரிவுசெய்த கருதினல்மார்சங்க திருக்கூட்டத்துக்கென்று அவர் வெனிஸ்நகரிலிருந்து ரோமாபுரி செல்லுகையில் அந்நகர் வாசிகளுக்கு ஓர் வாக்குறுதி அளித்துச்சென்றார். அதாவது, இறந்து உயிரின்றியோ, அன்றேல் உயிருடனோ வெனிஸ்நகருக்குத் திரும்பிவருவதாக மக்களுக்கு வாக்களித்துப் போயிருந்தார். இப்போது இந்தஉறுதிவாக்கு நிறைவேறப்போகிறது.

தற்போது ரோமாபுரி, அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்திலே கண்ணாடி முகப்பைக்கொண்ட ஓர் பீடத்தின் கீழ் இளைப்பாறுகின்ற அர்ச். 10-ம் பத்திநாதரின் புனிதஉடலானது இம்மாதம் 10-ந் திகதியாகிய நாளை வெள்ளிக்கிழமை இத்தாலிய அரசாங்கத்தால் வழங்கப்படும் அரசாங்க றெயின்வண்டி ஒன்றில் பூச்சியமாகவைத்து வத்திக்கான் இராச்சிய றெயில்வே ஸ்ரேஷனிலிருந்து வெனிஸ் நகரை நோக்கிச் செல்லவிருக்கின்றது.

1914-ம் ஆண்டு முதலாவது உலகயுத்தம் ஆரம்பமாகிச் சொற்பகாலத்தின் பின்னர் மரணமடைந்தவரும், 1954-ம் ஆண்டு மகாஆடம்பர வைபவங்களுடன் மாபெரும் சனக்குழாம் முன்பாகப் 12-ம் பத்திநாத பாப்பானவராலே அர்ச்சியசிட்டபட்டம் அருளப்பெற்றவருமான அர்ச். 10-ம் பத்திநாதரின் புனித உடல் அடுத்த வைகாசிமாதம் ரோமாபுரிக்குத்திரும்புமுன் ஏறக்குறைய ஒருமாதகாலம்வரை வெனிஸ்நகரிலுள்ள அர்ச். மாற்குவின் மகாதேவாலயத்தில் இருந்துவரும். சாம்பியெற்றினி என அறியப்படுகின்ற வத்திக்கான் இராச்சிய பணியாளரின் விசேஷ சைனியம்ஒன்று அர்ச். 10-ம் பத்திநாதரின் புனிதஉடல் வெனிஸ்நகருக்கும், பின்னர் அங்கிருந்து வத்திக்கானுக்கும் நடத்தும் பிரயாணத்தில் அதனுடன் கூடிச் செல்லவிருக்கிறது. ஆடம்பரவைபவத்துக்குரிய யூனிபோம் உடைகளை இவர்கள் அணிந்திருப்பார்கள்.

அர்ச். 10-ம் பத்திநாதருக்கு அருளப்பட்ட அர்ச்சியசிட்டபட்டதிருவைபவமானது 1954-ம் ஆண்டின் மரியன்னையின் வருடத்திலே மிகமேம்பட்ட சம்பவங்களில் ஒன்றாயிற்று. நவமாக அர்ச்சியசிட்டபட்டம்சூடிய அவரின் புனிதஉடலை அடக்கியிருந்த பளிங்குபோன்ற கண்ணாடிப் பேழையானது ஆறுவெண்குதிரைகளால் இழுக்கப்பெற்று அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்திலிருந்து அர்ச். மேரிமஜோர் மகாதேவாலயத்துக்குக் கொண்டுபோகப்பட்டபோது, ரோமாபுரி வீதிகளிலே பத்துலட்சம்மக்கள் தேங்கிநின்றார்கள்.

அவரின் புனிதஉடலை ஏற்றிக்கொண்டு அரசாங்க றெயின் வண்டி புறப்படவிருக்கும் வத்திக்கான் இராச்சிய றெயில்வே ஸ்ரேஷன் இற்றைக்கு 25 வருடங்களின் முன்னர் லத்தறன் உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகளின்படி இத்தாலிய அரசாங்கத்தால் அமைத்துக்கொடுக்கப்பட்டது. ஸ்ரேஷனிலிருந்து வத்திக்கான் எல்லைப்புறம்வரையிலுள்ள றெயில்பாதையின் நீளம் 2,600 அடி மாத்திரமே. இதன் பிரவேசவாயில் இருபெரிய இரும்புக்கதவுகளால் பொதுவாக மூடப்பட்டிருக்கும். சாமான் றெயின் வண்டிகளுக்கென்றே சமயோசிதமாகத் திறந்துவிடப்படுகிறது.

கிறக, சென்ற 26-ந்திகதி வியாழக்கிழமை வத்திக்கானிலிருந்து கிடைத்துள்ள தந்திச்செய்தி வருமாறு: "வெனிஸிலிருந்துவந்த ஓர் கிராமப் பாப்பானவ"ராகிய அர்ச். 10-ம் பத்திநாதரது தைலமூட்டிக் காப்பாற்றப்படும் புனித உடல் வருகிறமாதம் வெனிஸ்நகருக்கு அனுப்பிவைக்கப்படுவதற்குமுன்னதாக அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்தின் பக்கச் சிற்றாலயம் ஒன்றிலுள்ள தனது இளைப்பாறும் தலத்திலிருந்து இன்றுதினம் இடம்பெயர்க்கப்படலாயிற்று. தனது கண்ணாடிப்பேழையுடன் அது அம்மகாதேவாலத்திலுள்ள அறைஒன்றுக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

"இப்புனித உடல் வெனிஸ் நகரிலுள்ள அர்ச். மாற்குவின் ஆசனக்கோவிலுக்குச் சித்திரை மாதத்திலே ஒருமாதகாலத்துக்கு அனுப்பிவைக்கப் படுமென்று அருளப்ப பாப்பரசர் சமீபத்திலே கூறியிருந்தார். வெனிஸ் நகரின் பத்திறியாக்குவாயிருந்த அர்ச். 10-ம் பத்திநாதர் 1903-ம் ஆண்டு 13-ம் சிங்கராய பாப்பானவரிடமாகப் பதிலாளி ஒருவரைத் தெரிவு செய்வதற்கென நடந்தேறிய கருதினல்மாரின் திருக்கூட்டத்துக்குச் சமுகமளிக்குமாறு வெனிஸ்நகரிலிருந்து புறப்பட்டபோது, 'இறந்தவராகவோ, அன்றேல் சீவனுடனோ நாம்திரும்பவும் வருவோம்' என்று வெனிஸ்நகர் வாசிகளிடம் சொல்லிச்சென்றார்."

---

### அதிகம் சனநெருக்கமான இடம்

இன்றுஉலகில் அதிகம்கூடியநெருக்கமாகச்சனங்கள்வசிக்கும் இடம்யாது? ஹொங்கோங் தீவேயாகும். அதன் சனப்பெருக்கம் மாதந்தோறும் அதிகரித்துக்கொண்டுவருவதால் எழுந்துள்ளபிரச்சினை தீர்க்கமுடியாததாய் வளர்ந்துகொண்டுபோகின்றது. ஹொங்கோங்தீவும், 1898-ம்ஆண்டு 99வருடக்குத்தகையிலே பிரித்தானிக்குக்கொடுக்கப்பட்டசீனப்பிரதேசங்களும்391சதுரமைல் — அதாவது 1,012 சதுரகிலோமீற்றர் விஸ்தீரணமுடையன. இவைகளில் மிகப்பெரும்பகுதி செங்குத்தும், உணவுஉற்பத்திக்குப் பயன்படாதனவுமான மலைச்சாரல்களைக் கொண்டிருக்கின்றன. 1931-ம்ஆண்டு இவற்றின் சனத்தொகை 8லட்சத்து 50 ஆயிரம் பேர். ஆனால், இப்போது அவற்றிலே 25லட்சம்சனங்கள் — அதாவது ஒரு சதுரகிலோமீற்றருக்கு 2,400பேர்வசிக்கின்றனர். ஆனால், ஆசியாவிலே ஒரு சதுரகிலோமீற்றருக்குச் சராசரிவீதமாய் 70பேருக்குக்குறையாமலும், உலகமுழுவதிலும்சராசரியாய் 20பேர்வீதமும் வசிக்கின்றனர். செஞ்சீனாவிலிருந்து மாதந்தோறும்களவிலே ஆயிரக்கணக்கானசீனர்கள் ஹொங்கோங் குடியேற்றநாட்டில் போயடைகிறார்கள். அதனால்அங்கு 20அடிநீளமும், 20அடிஅகலமுமான வளவுஒன்றில் 12 பேர்வீதம் குடியிருக்கிறார்கள்.

---

# மட்டக்களப்பு
# தாண்டவன்வெளித் தபால்

**அர்ச் சூசைமாதவர் திருநாள்:**

பங்குனித்திங்கள் பதினெட்டாம் நாள் மாலைமணிஆறு. பாவாலும், மனப்பூவாலும் சூசைதாதாவைத் துதிக்கக்கூடினர் எம்பங்கினர். நம்பங்கிலே அர்ச். சூசைமாதவரின் புனித நாமம்பூண்டோரின் உபயத்தில் செபமாலை, பிரார்த்தனை, "வேஸ்பர்" என்னும் மாலைஆராதனை, அர்ச். சூசைமாதவரின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம், திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் என்பன பக்திப்பரிமளிப்புடன் நடந்தேறின. திருநாள்தினமாகிய மறுநாள் வியாழக்கிழமைகாலை பாடற்பூசைநிறைவேற்றி வண. எல். ஆர். அன்ரனிசுவாமியவர்களால் அர்ச். சூசையப்பரின் மகத்துவத்தைப்பற்றிய ஓர் பிரசங்கமும்செய்யப்பட்டது. பெருந்திரளானோர் திருவிருந்தருந்தித் திருவளனின் திருவருளையிரந்து திரும்பினர்.

**வயோதிபர் தாபன விழா:**

எமதுபங்கில் காட்டாற்று, கவனிப்பாரற்றுக்கிடந்த தலமானது இன்று மாடமாளிகைகளும், பல்வேறுதேவைகளுக்குரிய அழகியகட்டடங்களுமாக உருவாகிக்கொண்டிருக்கும் தலமாய், உயரியதோர் சிற்றாலயமும், அழகிய மலர்த்தோட்டங்களும், கடுவெயிலிலும்நின்று அயராதுழைக்கும் கன்னியர்சேவையும், ஆண், பெண் வயோதிபர்களின் கூட்டமும் அடங்கிய ஓர் நவீனநகரமேபோன்று வயோதிபர் தாபனமாய் அர்ச். சூசைமாதவனின் அடைக்கலநிழலின்கீழ் விளங்காநிற்கின்றது. வழமைபோல இவ்வருடமும் பக்திச்சிறப்புடன் இவர்திருநாளைக் கொண்டாடினர். அன்றுகாலை கிழக்கிலங்கைக் கத்தோலிக்கபாடசாலைகளின் பொதுமுகாமைக்காரர் வண. ஈ. கிறவுதர் எஸ். ஜே. சுவாமியவர்களால் பாடற்பூசை நிறைவேறியது. அதன்மேல் பகல்11மணியளவில் திருமலை ஆயர் மகாவந். இக்னேஷியஸ் கிளென்னி எஸ். ஜே. ஆண்டவர்அவர்கள் இப்பகுதிகளிலுள்ள கட்டளைக்குருவர்கள், அர்ச். மிக்கேல் கல்லூரியைச் சேர்ந்த குருப்பிரசாதிகள்சமேதராய் இத்தாபனத்திற்குத் தரிசனைஅளித்ததும் அதனைவளம்பெறநடாத்தும் தலைமைத்தாயார்அவர்களும், கன்னியர்களும், ஆண், பெண்பாலரான வயோதிபர்களும் ஒன்றுகூடி அவர்களை வரவேற்று உரியஉபசாரங்கள் செய்தனர். பின்னர் ஆண்டவர்அவர்களும், குருப்பிரசாதிகளும், தாயாரவர்களும், கன்னியர்களும உயர்முறையில் சித்தஞ்செய்யப்பெற்றிருந்த உணவுவகைகளைப் பரிமாறிவர, வயோதிபர்கள்அனைவரும் உல்லாசசல்லாபங்களோடு விருந்தில்ஈடுபட்டனர். முடிவில் ஆண்டவர்அவர்களால் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டது. அதன்பின் எல்லோரும் இனியசிற்றுண்டிவகைகளோடு தேநீர்அருந்திக் கலந்துரையாடித் தாபனத்தலைமைத்தாயார் அவர்களிடமும், கன்னியர்களிடமும் விடைபெற்று மீண்டனர்.

**கன்னியாஸ்திரியானார்:**

நமதுபங்கைச்சேர்ந்த திரு. எஸ். சவிரிமுத்து தம்பதிகளின் சிரேஷ்டபுதல்வி சென்ற19-3-59வியாழனன்று வாக்குத்தத்தம்கொடுத்துப் பிரான்சிஸ் கன்சபையின் நிரந்தரகன்னியாஸ்திரியானார் மட்டக்குளி பிரான்சிஸ்கன் சபைக் கன்னியர்ஆயத்தமடத்தில் (கொழும்பு).

இவ்வைபவத்தைத் தலைமைதாங்கி நிறைவேற்றிவைக்குமாறு நமதுகட்டளைக்குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக் சுவாமியவர்கள் அழைக்கப்பெற்றிருந்தார். திரு. எஸ். சவிரிமுத்துதம்பதிகள் குடும்பத்தினர், நமதுபங்கிலுள்ள பக்திச்சபைகளின் பிரதிநிதிகள், அபையர்கள்ஆகியோர் இவ்வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு சமுகமளித்திருந்தனர். அன்றுகாலை உரியவேளையில் சடங்காசாரமுறைகள் ஆரம்பமாயின. நமது தாண்டவன்வெளிப் பங்கின் செல்வி மதர்மேரி றோசறிமாகிறேற்என்னும் புதியநாமத்தைப் பெற்றுத் தனதுபங்குக்குரவர் சமுகத்தில் உன்னததேவனின் உத்தமசேவையைஏற்று, நிரந்தரகன்னியர்க்குரிய வார்த்தைப்பாடுகளைக் கொடுத்தார். இவரோடு மற்றுமொருகன்னியாஸ்திரியும் வார்த்தைப்பாடு கொடுத்தனர். மட்டக்களப்பு, கல்முனையைச்சேர்ந்த செல்வி கிளேறா ஞானப்பிரகாசம் என்பவ ஆயத்தசபையில்சேர்ந்து நமது கட்டளைக்குரவரிடம்அதற்குரியஉடுப்புகளைப் பெற்றுக்கொண்டனர். பின்னர் திவ்வியபலிபூசை நிறைவேறியது. அவ்வமயம் சுவாமியவர்கள் தேவதொண்டுக்குத் தங்களைஅர்ப்பணிக்கும் கன்னியரின்பெருமையையும், அவர்கள் கடமையையும் எடுத்துக்கூறியும், பெற்றோர்க்கு நன்மதிகள்கூறியும் ஆங்கிலத்தில் ஓர்சிறந்த பிரசங்கம்செய்தனர். பின்னர் "தெதேயும்" பாடப்பெற்றுத் திவ்வியநற்கருணைஆசீர்வாதம் அருளப்பட்டது. அதன்மேல் கட்டளைக்குரவருக்கும், கன்னியர்களின் இனபந்துக்களுக்கும், சமுகமளித்திருந்தார் அனைவர்க்கும் காலைப்போசனம்பரிமாறப்பட்டது. யாவரும் இன்னுரையாடி நன்மொழிகூறி மீண்டனர்.

**பரிசுத்த வியாகுலமாதா திருநாள்:**

19-3-59பிற்பகல் 6மணியளவில் எமதுபங்கிலுள்ள பரிசுத்தவியாகுலமாதா பக்திச்சபையினரின் உபயத்தில் வேஸ்பர்என்னும் மாலைஆராதனை பாடப்பெற்றது. பின்னர் வியாகுலமாதாவின் திருச்சுரூபத்தை வியாகுலமாதா பக்திச்சபையினர் முறைமுறையாகத் தாங்கிச்செல்லச் சுற்றுப்பிரகாரம் செபமாலை, பாடல்கள், செபங்களுடன்நடந்து திவ்வியநற்கருணை ஆசீர்வாதமும், திருச்சுரூபஆசீர்வாதமும் அருளப்பட்டன. அடுத்தநாள் காலை பெரியபாடற்பூசை நிறைவேறியது. அன்றுபிற்பகல் 3மணிமுதல்4மணிவரை வியாகுலத்தாயின் பக்திச்சபையினரால் விசேஷவணக்கவழிபாடுகள் நடத்தப்பட்டன. இவற்றிலே புளியந்தீவு, புளியடிக்குடாப பங்குகளிலுள்ள வியாகுலமாதா பக்திச்சபையினரும் கலந்துகொண்டனர். 4மணியளவில் வியாகுலபிரசங்கம் வாசிக்கப்பட்டது. அதன்மேல் திருப்பாடுகளின்பிரார்த்தனை சொல்லப்பட்டது. வியாகுலத்தாயின் பக்திச்சபையில் பத்துப்புதிய அங்கத்தவர் சேர்க்கப்பெற்றுச் சபைக்குரியசின்னங்கள் பெற்றனர். பின்னர் நமதுஆண்டவராகிய யேசுபெருமான் பாரச்சிலுவை தோளிற்சுமந்து பரிதாபமாகநடந்து கல்வாரிமலைசென்ற அந்தக் காட்சியை ஞாபகப்படுத்தும்படியாக எங்கள்கட்டளைக்குரவர் சிலுவை சுமந்து பரிசுத்தவியாகுலமாதா ஆலய

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# கத்தோலிக்க சமாச்சாரம்

## பிரசித்திபெற்ற 32 புதுமைகள்

லூர்துபதியின் நூற்றாண்டுவருடத்தில் அருளப்பட்டுள்ள பிரசித்திபெற்ற 32 அற்புதஆரோக்கியங்கள் பற்றிய அறிக்கைகள் தற்போது அப்பதி வைத்திய சபையால் பரிசீலனை செய்யப்படுகின்றன. இவற்றில் ஒன்று வடஅயர்லாந்தில் கோடவுண் நகரைச்சேர்ந்த திருமதி பற்றிசியா மைக்பிறைட்எனும்மாது அடைந்துள்ள அற்புத ஆரோக்கியமாகும். இவள் ஓர் ஊமையாய் ஏழுவருடங்களாகப் பாரிசவாதத்தினல் முற்றாகப் பீடிக்கப்பட்டிருந்தாள். ஆனால், சென்ற வருடம் ஐப்பசிமாதம் லூர்துபதியைத் தரிசித்தபோது, வாய் திறந்து பேசவும், காலெடுத்து நடக்கவும் கூடியவளானள். இவளுடைய ரோகநிதானம் வைத்தியசபையால் இன்னும் உறுதியாக்கப்படவில்லை. பரிசோதனை செய்யப்பட்டுவருகிற பிரசித்திபெற்ற அற்புத ஆரோக்கியங்களின்தொகை வழமையான வருடாந்த சராசரியிலும் சென்றவருடம் அதிகம்உயர்ந்துள்ளது.

---

## பெர்னதேத்தின் சுற்றத்தவர்கள்

லூர்துபதியிலே மாதாவின் காட்சிபெற்ற அர்ச்.பெர்னதேத் சுபுருவின் சுற்றத்தவர்களாய் இருபது பேருக்குமேல் அப்பதியில் தற்போது வசிக்கின்றனர். இவர்களில் எம். பிரான்கோயிஸ் சுபிரு முக்கியமானவர். 30 வயதுடையவரான இவர் விவாகஞ் செய்து தனது மனைவியுடனும், நான்குவயதுள்ள ஓர்புதல்வனுடனும் ஓர்காலம் சிறைக்கூடமாயிருந்து பிந்தப் பெர்னதேத்அம்மாள் வசித்திருந்த வீட்டின் மேலாகக் கட்டப்பெற்ற மேல் மாடம்ஒன்றிலே சஞ்சரித்திருந்து அம்மாடவளவிலுள்ள குடும்ப ஞாபகசின்னங்களைப் பாதுகாத்துவருகின்றார். இவர் பெர்னதேத் அம்மாளின் சகோதரர் ஒருவரின் பௌத்திரர். பெர்னதேத்அம்மாள் இளமையிலே தனது மருமகன் ஒருவருக்கென்றுசெய்த ஞானஸ்நான அங்கிஒன்று சுபிரு இல்லத்தில் இப்போதே முதன்முறையாகக் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிறது. இதமருகன் பிந்த ஓர் குருவாகித் தென் அமெரிக்காவிலே காலஞ்சென்றார்.

---

## பிள்ளைகளின் கத்தோலிக்க சேவை

ஐக்கிய அமெரிக்க தேசத்திலுள்ள முப்பதினுயிரம்பிள்ளைகள் ஒன்றுசேர்ந்து ஓர்கத்தோலிக்க பாடசாலையைக் கட்டுதற்கெனப் பணம் சேமித்து வருகிறார்கள். தேவைப்படும் பணம் முழுவதையும் சேகரித்துவிடலாமென்ற நம்பிக்கையுடையோராய் இவர்கள் காணப்படுகின்றார்கள். இற்றைக்கு இரு வருடங்களின்முன் இவர்கள் 7,000 பவுண் சேமித்து அதைக்கொண்டு ஓர் கோவில் கட்டினர்கள். இவர்கள் அத்தேசத்திலே லாக்குரோஸ் மேற்பிரசனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள்முயன்றுள்ள பாடசாலை தென்னமெரிக்காவைச் சேர்ந்த பொலிவியா நாட்டிலுள்ள சந்தாக்குருஸ்நகர திருச்சிலுவை விசாரணைப்பங்கில் கட்டப்படவிருக்கிறது இவர்களுடைய மேற்பிராசனத்தைச் சேர்ந்த வண. யோசெவ் வாலியூஸ்கிசுவாமியார் அந்நகரிலே ஓர்மிஷனரியாகத் தொண்டாற்றிவருகின்றார். அதே விசாரணைப்பங்கில் இருந்துவரும் திருச்சிலுவைக் கோவிலை இந்தப்பிள்ளைகளே இருவருடங்களின்முன் கட்டினர்கள்.

---

## லூர்துபதிக்கு ஆயிரம்முறை திருயாத்திரை

லண்டன்நகர் வாசியான 90 வயதுடைய திரு. ஆஸ்ரின் பிறேடி என்பவர் தனது சிவியகாலத்திலே இதுவரை ஆயிரம் முறை லூர்துபதிக்கு யாத்திரை செய்திருக்கிறார். கடைசியான ஆயிரமாம்முறையாக இவர் தேவபராமரிக்கையின்சபைப் புதல்வர்களால் ஒழுங்குபண்ணப்பட்ட நூற்றாண்டுவிழா யாத்திரையில் கலந்துகொள்ளலாயினர். தற்போது இவர் லண்டனிலே கிங்ஸ்ரன் எனுமிடத்திலுள்ள தேவபராமரிக்கையின்சபை விருத்தாப்பியர்சாலையிலே இருந்துவருகின்றார். லூர்துபதி நூற்றூண்டு முடிவுவிழாவிற்குச் சமுகமளிக்க முடியாதிருந்த ஓர்பெண் தனது திக்கெற்றை இவருக்குக் கொடுக்கவே, அவரும் எதிர்பாராதவிதமாய்த் தமக்குக் கிடைத்த அதிர்ஷ்டத்தைப் பெற்று, 70 பேரைக் கொண்ட ஓர் கோஷ்டியுடன் சென்று, அங்கே மசபியேல்குகைப்பாறையின் அடியிலே அவர்களின் நேர்த்திக்கடன் மெழுகுவர்த்தியை ஏற்றிவைக்கவும் தெரிவு செய்யப்பட்டார். தினமும் இவர் அதிகாலையில் துயிலொழிந்து, 6-30 மணிக்கு வயோதிகர்சாலைச் சிற்றாலயத்தில் பூசைகாணச் செல்லுகின்றார். காலப் போக்கிலே கிழிந்துபோன தனது செபப்புத்தகத்தைக் கருத்தாக வாசித்துவருகின்றார்.

---

## பாப்பரசரைச் சந்தியாதிருக்க வழமையான வேண்டுகோள்

எலிசபேத் மகாராணியாரின் தாயாரான இராணியார் சமீபத்திலே ரோமைநகருக்கு விஜயஞ் செய்யவிருக்கின்றார். அங்கே இவர் தங்கியிருக்கும்போது வத்திக்கான்மாளிகைசென்று பாப்பரசரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. ஆனல், ஸ்கொத்திலாந்தின் சுதந்திர புரொட்டஸ்தாந்தசபை அதிகாரிகள் இராணியாருக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றிலே, அவர் ரோமைநகர் செல்லும்போது பாப்பரசரைச் சந்திக்கவேண்டாமென்று அவரைக் கேட்டிருக்கின்றார்கள். இவ்விதம் கேட்பதிலே பிரித்தானிய அரசகுடும்பத்தைச் சேர்ந்தஒருவர் வத்திக்கானைத் தரிசிக்களண்ணும் ஒவ்வோர்முறையும் ஆட்சேபித்து எதிர்பேசும் தனது பாரம்பரியத்தைத இந்தச்சுதந்திர புரொட்டஸ்தாந்தசபை பின்பற்றுவதாக அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். "மந்த்லி றெகோட்" என்ற இச்சபைச் சஞ்சிகையில் வெளிவந்துள்ள ஓர் கட்டுரையில், தனிப்பட்ட முறையிலே பாப்பரசர்தரிசனை செய்யப்பட்டபோதிலும் அது பாப்பரசின் "அகந்தையான உரிமைகளை" அங்கீகரிப்பதாக அர்த்தங்கொள்ளுமென வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

---

## பாப்பரசரும் பிரான்ஸிய பாஷையும்

பிரான்ஸிய பாஷைக்கென்று வழங்கப்படும் தங்கப் பதக்கத்தைப் பிரான்ஸிய சாஸ்திர கழகம் இம்முறை 23-ம் அருளப்ப பாப்பரசருக்குச் சன்மானித்திருக்கிறது. அக்கழகத்தைச்சேர்ந்த கலைஞர்களின் தூதுக்கோஷ்டி அதை எடுத்துச்சென்று பரீஸ் நகரிலுள்ள பாப்பரசின் ஸ்தானிகரிடம் கையளிக்கலாயிற்று. கருதினல் ரொங்கல்லி எனும் நாமதேயத்துடன் பாப்பரசர் பிரான்ஸிலே பாப்பரசின்ஸ்தானிகராய் இருந்தபோது அவர் பிரான்ஸிய பாஷையைச் சுத்தமாகவும், அழகாகவும் பேசியதையிட்டுத்தான் இந்தப்பதக்கம் அவருக்குச் சன்மானிக்கப்பட்டுள்ளது. பிரான்ஸியபாஷையிலே தமக்குள்ள ஞானத்தையிட்டுப் பிரான்ஸிய சாஸ்திரகழகம் தங்கப்பதக்கம் சன்மானித்ததற்காகப் பரிசுத்த பிதா அதற்கு நன்றிதெரிவித்து அனுப்பிய ஓர் திருமுகத்திலே, "உங்கள் பாஷையைக் கையாளுவதற்கும், உங்களது இலக்கியத்தின் இணையற்ற பொக்ஷங்களை உள்ளிட்டு அறிந்துகொள்ளவும் நாம் கற்றுக்கொண்டோம்" எனத் தெரிவித்திருக்கின்றார். மேலும் தமக்கு முன்னிருந்த 12-ம் பத்திநாதபாப்பானவருக்கு இதேகௌரவம் வழங்கப்பெற்றபோது பரீஸ்நகரில நிகழ்ந்த வைபவத்துக்குத் தாமும்சமுகமாயிருந்ததை அவர் ஞாபகத்திற்குக் கொண்டுவரலாயினர்.

---

## அர்ச். சூ.ரேதார்ஸின் நூற்றாண்டு விழா

அர்ச். சூரேதார்ஸ் எனப் பிரஸ்தாபமாக அறியப்படுகின்ற அர்ச். வியான்னி அருளப்பர் பரமபதமடைந்த நூறாம் ஆண்டு விழா வருகின்றது. ஆவசியகமான அனுமதி வழங்கப்படுமிடத்து அவர் ஓர் பங்குக்குருவராய்த் தமது வாழ்க்கையிலே சுமார் 40 வருடங்களைச் செலவிட்ட ஆர்ஸ்நகரிலே குருமாருக்கென்று ஓர்பெரிய விடுதியையும், யாத்திரிகர்கள் மண்டபம்ஒன்றையும் அமைப்பதற்குந் துணைபுரியுமாறு அகில முழுவதிலுமுள்ள குருமார் அழைக்கப்படவிருக்கின்றனர். அவற்றிற்கு 35 லட்சம் ரூபா தேவைப்படுகின்றது. லூர்துபதியிலே நிலமட்டத்தின் கீழ் அர்ச். 10-ம் பத்திநாதரின் மகாதேவாலயத்தைப் பெரும் பேராய்க்கட்டியெழுப்பிய அதே நிர்மாணசிற்பியே இவைகளையும் நிர்மாணித்துக்கட்டுவார். ஆர்ஸ் நகரை வருடந்தோறும் தரிசித்துச் செல்லுகின்ற 6,000 குருமாரில் அநேகமானேர் தங்குவதற்கு இடவசதியளிக்கப்போதியதாய்க் குருமார் விடுதியை அமைக்கும் வேலை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. மண்டபம் ஆயிரம்பேருக்கு ஆசனவசதிகள் அளிக்கக்கூடியதாய் ஓர்அந்தத்தில் பலிபீடம்ஒன்றைக் கொண்டிருக்கும். இதனை அமைக்கும் வேலை அடுத்த கோடைகாலத்தில் ஆரம்பமாகும். ஆர்ஸ் நகரிலுள்ள கோவில் 500 பேருக்கே ஆசனவசதிகளைக் கொண்ட மிகச்சிறிய தொன்றாகும். அதனல், பெருந்தொகையான யாத்திரிகர்கள் வரும்போது சமய வைபவங்களும், மகாநாடுகளும் நடத்தக்கூடியதாய் இந்தமண்டபம் தேவைப்படுகின்றது.

---

## தேவதாயாரின் புதியஆலயத்தை நிஸாம் மன்னர் திறந்துவைத்தார்

இந்தியாவிலே ஐதரபாத் இராச்சியத்தின் முஸ்லீம் மன்னராய் விளங்கியிருந்த நிஸாம்அவர்கள் அங்கு தேவதாயாருக்குத் தோத்திரமாகக் கட்டியெழுப்பப்பெற்ற நவமான ஆலயத்தைச் சமீபத்திலே திறந்துவைக்கலாயினர். உலகிலுள்ள மகா செல்வந்தர்களில் ஒருவரெனப் பிரஸ்தாபம் பெற்றுள்ள நிஸாம்மன்னர் இந்தப் புதிய ஆலயத்துக்கும், காய்ரதாபாத் எனுமிடத்திலுள்ள ஆரோக்கியநாயகியின் திருசேத்திரத்துக்கும் அதிகம் தாராளமாகப் பெருந்தொகைப்பணம் உதவியவர்களில் ஒருவராவர். ஒரு தொகையான மேற்றிராணிமார் கூடியிருந்த சமுகத்திலே இவர் அதனைத் திறந்துவைத்தார். இற்றைக்கு ஐந்துவருடங்களின் முன் நத்தால்திருநாளன்று இப்புதியஆலயத்திற்கு அத்திபாரக்கல் நாட்டியவரும் இவரே. ஐதராபாத்தின் கோபு அதிமேற்றிராணியார் ஆலயத்தைப் பிரதிஷ்டைசெய்யலாயினர். நிஸாம் மன்னர் நெடுங்காலமாகத் தேவதாயாரில் மிகுந்த பக்திகொண்டுள்ளவர். கோரானிலே தேவதாயார் குறிப்பிடப்பட்டிருக்கின்றார் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. மிகப்பெரும் பான்மையான இந்திய முஸ்லீம்களின் பாஷையாகிய உருது பாஷையிலே தேவதாயாருக்குத் தோத்திரமாக ஓர்முறைஇவர் அழகான கீதம் ஒன்றும் இயற்றியுள்ளார். 1956-ம் ஆண்டு இவர் தமது அதிகாரபதவியிலிருந்து இளைப்பாறுகிறவரையிலே வருடந்தோறும் நத்தால்திருநாள் நடுச்சாமப் பூசைக்குச் சமுகமளித்துவந்தார்.

## சித்திரை மாதம்

**பொதுக்கருத்து :** கிறீஸ்துநாதரை அகற்றிய சமுதாயத்தில் உழைக்கும் குருமாருக்காக வேண்டிக்கொள்வது.

**மிஷன்கருத்து :** இரட்சணிய அலுவலில் ஈடுபடும் சாதாரணகத்தோலிக்கர் தங்கள் ஞானப்பணிக்குத் தேவையான ஆத்மீக, போதனை, விஞ்ஞான, யந்திரிகஅறிவில் உறுதியாக ஆயத்தப் படுத்தப்படுமாறு மன்றாடிக் கொள்வது.

---


சத்திய வேத

# பாதுகாவலன்

1959-ம் ஆண்டு

சித்திரை மாதம் 9-ந் திகதி


---

## செஞ்சீனவும் தீபேத்தும்

''இலங்கையை ஓர்ருஷிய குட்டி இராச்சியம் ஆக்கும்படியாய்க் கம்யூனிஸ்தர்களிடம் கையளிப்பதற்கான ஏற்பாடுகளைப் பிரதமர் பண்டாரநாயகாவின் தலைமையிலுள்ள எம். ஈ. பி. அரசாங்கம் செய்துகொண்டிருக்கிறது; கம்யூனிஸ்த தலைவர்களால் இலங்கை ஆட்சிசெய்யப் படுவதைக்காணச் சிலமந்திரிமார் ஆவலுள்ளவர்களாய்க் காணப்படுகின்றனர்''என்று இந்நாட்டின் அரசியற்தலைவர்ஒருவர் கூறுகின்றார். ''கம்யூனிஸ்த கருத்துகளைக்கொண்ட சிலர் மந்திரிசபைக்குள்ளும், எம். ஈ. பி. கட்சிக்குள்ளும் புகுந்துவிட்டார்கள்; மந்திரிசபையிலே கம்யூனிஸ்த அபிப்பிராயங்கொண்ட மந்திரிகள்இருக்கும்வரை மந்திரிசபையில் கலவரமும்,குழப்பமும் இருந்தேதீரும்''என்று மந்திரிஒருவரே கூறுகின்றார். இந்தமந்திரிகூறும் கம்யூனிஸ்த கருத்துகளைக் கொண்ட மந்திரிகள் கம்யூனிஸ்த பாதையிலே அரசாங்கத்தை இழுத்துச்செல்லச் சர்வாதிகாரப் போக்குடன் செயலாற்றிவருவதைப் பெரும்பான்மையான மந்திரிகளே நன்கறிவார்கள். அதனால் இலங்கையின் எதிர்காலம் என்னவாகுமோ என்று பலரும் ஏங்கிக்கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்திலே இமயமலைப் பிரதேசத்தில் அமைந்துள்ளதும், உலகின்முகடென அறியப்படுவதுமான தீபேத்தைச் சீனக்கம்யூனிஸ்தஅரசாங்கம் தனதுஆயுத பலத்தைக்கொண்டு அடிமைப் படுத்தியிருப்பதானது அகிலமுழுவதுமே பெருந்திடுக்காட்டத்தை உண்டுபண்ணியிருக்கின்றது.

இலங்கையின்கதி எதிர்காலத்தில் யாதாகுமோவென்று நாம் திகைத்துக்கொண்டிருக்கும்போது நமக்குஅதிகந்தூரத்திலில்லாத தீபேத்திலே— கம்யூனிஸ்த அடிமைத்தளையிலிருந்து தங்கள் விடுதலைக்கும், சுதந்திரத்திற்குமாக மக்கள்போராடிய தீபேத்திலே நிகழ்ந்துள்ளசம்பவங்களை நினைக்கும்போது, இற்றைக்கு இரண்டரைவருடங்களின்முன் ஹங்கேரியில்நிகழ்ந்த படுபாதகமான சம்பவங்கள் நமதுஞாபகத்தில் வருகின்றன. இருநாடுகளும் ஒரேசம்பவத்தையே எடுத்துக் கூறுகின்றன. கம்யூனிஸ்த கொடுங்கோன்மையாலே அடக்கியொடுக்கப்பட்ட ஹங்கேரிய மக்கள் தொகையிலே சிறிதாயிருந்தாலும் அந்தக்கொடுங்கோன்மையை வீரத்துவமாக எதிர்த்துப் போருக்கெழுந்து ஆரம்பத்தில் வெற்றியீட்டினார்கள். ஆனால்,ருஷியசெம்படை தனதுமுழுப்பலத்தையுங் கொண்டு அவர்களின் சுதந்திர எழுச்சியை ஈனவிரக்கமின்றிக் குரூரத்தனமாகஅடக்கியொடுக்கி ருஷியகம்யூனிஸ்த ஆதிபத்தியத்தின் குதிக்காலில் அவர்களைப் பணியவைத்து அடிமைகளாக்கியது.

இன்று தீபேத்தின்முறைவந்து, செஞ்சீன அதனை ஓர்கை பார்த்திருக்கிறது. தலைசிறந்த ஓர்புத்தநாடாகிய தீபேத்தின்கதியைப் பற்றி இனிப்பேசவேண்டியதில்லை. ஆனால்,அதன்சோகநிலையைக்கண்டு ஆசியநாடுகள் தகுந்த பாடம்படிக்குமானால் அது பயன்தராமல் போகமாட்டாது. தனதுகுடிசனங்களாகப் புத்தசமயிகளையே முற்றுகக்கொண்டதும், புத்தகுருமாராலே வழிநடத்தப்படுவதுமான தீபேத்தியமக்கள் செஞ்சீன ஆதிக்கத்தை எதிர்த்துப் போருக்கெழுந்தார்கள். ஆனால்,செஞ்சீனப்படைகளின் குண்டுவீச்சுகளைஎதிர்த்து அவர்களால் நின்றுபிடிக்கமுடியவில்லை. அந்நாட்டிலுள்ள புத்தமடாலயங்கள்மீது கடுமையாக வெடிகுண்டுகள் வீசப்பட்டு அவைகள் பெருஞ்சேதமுற்றன. பதின்மூவாயிரம்புத்தகுருமார் கைதிகளாக்கப் பட்டார்கள். தீபேத்தியர்களிலும் பல்லாயிரவர் இறந்துபோகப் பல்லாயிரவர் சிறைபிடிக்கப்பட்டுள்ளார்கள். தீபேத்தியர்களின் ஆத்மீக தலைவரான தலாய் லாமா தமது உயிரையுங்கொண்டு சீனக்கம்யூனிஸ்தர்களிடமிருந்து தப்பி இருபதுநாட்களின்பின் இந்தியாவில் சரணடைந்திருக்கின்றார். இவரின்போட்டியாளரும், கம்யூனிஸ்தஆதரவாளருமான பஞ்சன் லாமா இப்போது தீபேத்தின் தலைப்பட்டணமாகிய லாசாநகர் வந்துசேர்ந்து செஞ்சீனவின் கைப்பொம்மையாக விருந்து அரசாங்கத்தை நடத்துகின்றார்.

செஞ்சீனஅநீதியாகத்தீபேத்தை ஆக்கிரமித்துள்ளதென்றும் ஓர் பலவீனமான அயல்நாடு பலம் பொருந்திய ஓர்நாட்டினால்வதைக்கப்பட்டுள்ளதென்றும் இந்தியாவில் இப்போது கிளர்ச்சிஎழுந்திருக்கிறது. கம்யூனிஸ்த கட்சி நீங்கலாக இந்தியாவிலுள்ள ஏனையஅரசியற்கட்சிகளின் தலைவர்களெல்லாம் ஒன்றுசேர்ந்து தீபேத்தில் சீனநடத்திய அடக்குமுறையைக் கண்டித்திருக்கின்றனர். இந்தியகம்யூனிஸ்த கட்சித் தலைமைப்பீடத்தால் வழிநடத்தப்பட்டும், வெளிநாட்டிலிருந்து உதவியைப்பெற்றும் வருகின்ற கேரளநாட்டுக் கம்யூனிஸ்த ஆட்சியின் போக்குவாக்கெல்லாம் இந்தியாமுழுவதையும் கம்யூனிஸ்த ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவருவதல்லாது வேறென்ன? வடக்கே தீபேத்து, தெற்கே கேரளம், அப்பால்!

இலங்கையிலுள்ள புத்தகுருமாருக்கும், புத்தர்களுக்கும் தீபேத்தியசம்பவம் ஓர்நல்லபாடமாகும். தலையாய புத்தநாட்டின் கதி இவ்வாறாயின் தங்கள் புத்தநாட்டின்கதி எவ்வாறாகுமென்று அவர்கள் சிந்திக்கவேண்டிய சந்தர்ப்பம்இதுவாகும். தீபேத்து உள்ளபடியே கம்யூனிஸ்த சீனவுக்கு அடிமைகுடிமையாகுமானல் இந்தியாவுடையவும், கம்யூனிஸ்தல்லாத கிழக்குஆசியநாடுகளினதும் எதிர்காலத்தைப் பற்றிப் பேசவேண்டியதில்லை. கம்யூனிஸம் உலகின் முகட்டில் — பூமுகத்தின் உச்சியில் ஏறிக்கொண்டது; இனிமேல்அதற்கு ஏறவிடமில்லை; அதனால்அது இறங்குங்காலம் — அதாவது அதன்வீழ்ச்சியின்காலம் அண்மிவிட்டதென்று எண்ணுவாரும் உண்டு. ஆனால்,பூமுகத்தின் உச்சியைஅடைந்துள்ள கம்யூனிஸம் அதிலிருந்துகொண்டு பூவுலகத்தை ஓர்கால்ஆட்டிவைக்குமோவென்று சிந்திப்பாரும் இல்லாமலில்லை.

சீனவுக்கு இதுவரை இலங்கையரில் எத்தனையோபேர் விஜயஞ்செய்து திரும்பியிருக்கின்றனர். ஆனால்,இவர்களில் ஒருபெரும்பாலார் ஏதோமந்திரத்தால் வாய் கட்டுண்டவர்களைப்போல் அந்நாட்டிலே கம்யூனிஸ்த அரசாங்கம் செய்யும் அட்டூழியங்களைப்பற்றி யாதும்பேசாது மௌனஞ்சாதிக்கின்றனர். ஓர் சிறுபாலார் அந்நாட்டின்நிலைமையை வானமட்டாகப் புகழ்ந்து ஏதோபுதையல் கண்டவர்களைப் போன்று நடித்துக்கொள்ளுகின்றனர். ஆனால், இலங்கைச் சுகாதாரமந்திரியான திருமதி விமலா விஜயவர்த்தனஎன்ற வீரமங்கை யாதுசொல்லுகின்றார்? ''சீனவுக்கு நான்போனபிறகுதான் கம்யூனிஸ்த ஆட்சியின்கொடுமையை என்னால் உணரமுடிந்தது; அங்கு தனிப்பட்டோர்சுதந்திரம் இல்லை''யென்று பகிரங்கமாகச் சொல்லுகின்றார். இந்தச்சுதந்திரம் இல்லையென்றால் அங்கு வேறென்ன சுதந்திரம்தான் இருக்கமுடியும்?

---

## சுதேச வர்த்தமானம்

### மற்றோர் கூட்டுறவுஆஸ்பத்திரி

தீவுப்பகுதியிலும் கூட்டுறவு ஆஸ்பத்திரிஒன்றை அமைப்பதற்கானமுயற்சி தற்போது நடைபெற்று வருகிறது. தீவுகள் அனைத்திற்கும் பொதுவானஓர் இடத்திலே அமைக்கப்படவிருக்கும் இந்தக்கூட்டுறவுஆஸ்பத்திரி மூளாயிலுள்ள கூட்டுறவுஆஸ்பத்திரியைப் போன்று இருக்குமென்றும், இதற்கானநிதி தீவுப்பகுதியிலே பங்குகள் மூலம் சேர்க்கப்படுமென்றும் சொல்லப்படுகிறது.

### கடற்படையினர் வெளியேறினர்

அரசாங்க வெளிவிவகாரப்பகுதி விடுத்த ஓர்உத்தரவைத்தொடர்ந்து நயினதீவிலே முகாமிட்டிருந்த கடற்படையினர் திடீரென அங்கிருந்து வெளியேறியுள்ளனர். தீவுப்பகுதி எம். பி. திரு. வி. ஏ. கந்தையா அவர்களின் தலைமையிலேசென்ற தூதுக்கோஷ்டிஒன்று வெளிவிவகார அதிகாரிகளைக் கண்டு பேசியதைத்தொடர்ந்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டு நயினதீவிலிருந்து கடற்படையினர் உடனடியாக வலசைவாங்க வேண்டியதாயிற்று. இந்தக்கடற்படையினர் நயினதீவுமக்களுக்குப் பலவழியாகவும் இழைத்துவந்த கஷ்டங்களும், இவர்களின் அட்டூழியங்களினால் அங்குள்ள கடற்தொழிலாளர்கள்உட்படப் பலரும் இல்லிடங்கள், தொழில்உபகரணங்களை இழந்து பட்டபாடுகளும் இம்மட்டென்று எவரால் சொல்லமுடியும்?

### தபாற்சலார் அதிகரிக்கும்

நிகழும்சித்திரைமாதம் 15-ந்திகதி முதல் தபாற்சலார்வீதங்கள் உயர்த்தப்படவிருக்கின்றன. எயர்மெயில்சலார்கள் 10முதல்15சதம்வரை உயர்த்தப்படும். அன்றுமுதல் இந்தியாவுக்கு எயர்மெயில்சலார் 35சதத்திலிருந்து 45சதமாகஉயரும். எக்ஸ்பிறஸ்கடித சலார் 50சதத்திலிருந்து 70சதமாக உயரும். இவ்விதம் பல்வேறுதபாற்சலார்களை உயர்த்துவதின்மூலம் அரசாங்கத்துக்குச் சுமார்45லட்சம்ரூபா மேலதிகவருமானம் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்போது ஒற்றுவாநகரில்நிகழ்ந்த சர்வதேச தபால்யூனியன்மகாநாட்டில் செய்யப்பட்ட முடிவுகளின்படியே தபாற்சலார்கள் இவ்வாறு உயர்த்தப்படுகின்றன.

### பத்துலட்சம்ரூபா செலவு

அவசரகால ஆரம்பத்திலே அகதிகளையும், பட்டாளத்தவரையும் அனுப்பிவைக்கப் பல்வேறு பிறநாட்டுக் கம்பெனிகளைச்சேர்ந்த கப்பல்கள்உபயோகிக்கப்பட்டன. தற்போது இந்தக்கம்பெனிகள் அதற்கெல்லாம் சலாராக அரசாங்கத்தினிடம் சுமார்பத்துலட்சம்ரூபா கேட்டிருக்கின்றன. இந்தக் கம்பெனிகளுக்குச் சொந்தமானவைகளாய்ச் சென்றவருடம் ஆனிமாதம் கொழும்புத் துறைமுகத்தில்நின்ற 20 கப்பல்களை அவசரகாலவிதிகளின்கீழ் அரசாங்கம்பெற்று அகதிகளையும, பட்டாளத்தவரையும் ஆங்காங்கு அனுப்பிவைக்க உபயோகித்தது. அதற்காக இதுவரைஅது ஜப்பானிய கம்பெனி ஒன்றுக்குமட்டுமே 32,000 பவுண்கொடுத்துள்ளது.

### யாழ்தேவி தடம்புரண்டது

யாழ்ப்பாணத்திலிருந்து சென்றதிங்கட்கிழமைகாலை 5மணிக்குப்புறப்பட்டுக் கொழும்பைநோக்கிச் சென்றுகொண்டிருந்த எக்ஸ்பிறஸ் யாழ்தேவி 7-25மணிக்கு மாங்குளத்துக்குச்சமீபமாய்த் தடம்புரண்டமையால் எஞ்சினும், ஐந்துபெட்டிகளும் பாதையைவிட்டுவிலகி அதிகசேதத்துக்குள்ளாயின. சமீபகாலத்திலே மாங்குளத்துக்குச் சமீபமாகஏற்பட்ட இரண்டாவதுறெயில்விபத்து இதுவாகும். இந்தவிபத்தில் வெள்ளவத்தையைச் சேர்ந்த திருமதி எஸ். நடுவேல்என்ற பெண்ணைத்தவிர வேறெவருக்கும் காயம்ஏற்படவில்லை. இந்தவிபத்துக்குச் சதிவேலைதான் காரணமென்பதற்கான அறிகுறிகள்காணப்பட்டுள்ளன. அதனால்விசாரணை நடத்த றெயில்வே அதிகாரிகள் அனுப்பிவைக்கப்பட்டார்கள்.

### தாதிமார்பயிற்சிக்கல்லூரி

யாழ்ப்பாணத் தாதிமார்பயிற்சிக் கலாசாலைக்கு இந்தியாவிலிருந்து தாதிப்பயிற்சி அளிக்கக்கூடிய ஆசிரியைகளைப் பெற்றுக்கொள்வதற்கான விசேஷ அனுமதியைப் பிரதமர்வழங்கியிருப்பதாகத் தெரியவருகிறது. உலக சுகாதாரஸ்தாபனம் செய்யவேண்டிய ஏற்பாட்டுக்குப்பதிலாகச் சுகாதார பகுதி தற்போது நேரடியாக இந்தஆசிரியைகளைப் பெற்றுக்கொள்ளும் விசேஷசலுகை வழங்கப்பட்டிருக்கிறது. தாதிப்பயிற்சி அளிக்கக்கூடிய ஆசிரியைகளை இந்தியாவிலிருந்து பெற்றுக்கொள்வதற்குச் சுகாதாரபகுதியின்சார்பாக ஊர்காவற்றுறைஎம். பி. திரு. வி. ஏ. கந்தையா அவர்கள் சமீபத்திலே சென்னைக்குச்சென்று மந்திரிமாருடனும், சுகாதாரதலைவர்முதலானோருடனும் பேச்சுவார்த்தைநடத்தி வேண்டியஏற்பாடுகளைச் செய்துவிட்டுத் திரும்பினரென்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

---

**"ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."**

**TUITION**
**IN**
SHORTHAND-TYPEWRITING

Students (either sex) prepared for Pitmans London, London Chamb. of Comm. and other Examinations. Students already trained are in Govt. Service, Firms, Schools and other Institutions.

CHARGES MODERATE
SUCCESS GUARANTEED
JOSEPH ANDREW
"Mazenod House"
4th Cross St., Jaffna.

## அர்ச். சூசையப்பரின் சிறியநாய்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றிலே அர்ச். சூசையப்பர் நாமத்திலே கட்டப்பெற்றிருந்த சிற்றாலயத்தில் இயன்றதிருப் பணிவிடையை நடத்திவரும்படி நியமித்துவிட்டார்கள். ஓர்நாட் சாயந்தரம் குருவானவர் பிறதர் அந்திரேயுடன் உலாவிக்கொண்டு போகும்போது அவரைவிளித்து: "நான் சஞ்சூசையப்பருக்காக நல்லவேலை செய்யவேண்டுமென்று நீர்விரும்பினல், நீர் என் கண்பார்வை மீண்டும் எனக்குக் கிடைக்கும்படி செய்யவேண்டும்; மந்திரமாலைப் புத்தகம் வாசிக்கவோ என்னல் முற்றும்மாளாது; பூசைப்புத்தகத்தையும் பெரிதும் வில்லண்டப்பட்டே வாசித்துவருகிறேன்" என்றார். பிறதர் மறுமொழியாக: "நாளையத்தினமே நீர் மந்திரமாலை செபிக்கக்கூடியவராயிருப்பீர் சுவாமி" என்றார். பிறதரின்வாக்கு விருதாவாக்காக முடியவில்லை, குருப்பிரசாதியானவர் இழந்தபார்வையைத் திரும்பவும்அடைந்து இருபத்தைந்து வருடகாலமாக மேற்படி திருப்பதியிலே சிறந்ததிருத்தொண்டாற்றிவரலாயினர். நோய்ப்பட்ட அவரது கண்ணின் நிலைமையை நன்கறிந்த கண்வைத்தியர்கள் நீர் வாசிப்பதெவ்விதமென எங்களுக்கு முற்றுமே விளங்காதெனக்குருவானவருக்கு நேரே அதிசயப்பிரமையோடு அறிக்கையிட வேண்டியவர்களானர்கள்.

ஓர்நாள் பெருந்தொகைப்பட்ட பிணியாளிகள்வந்து குழுமிவிட்டார்கள். அர்ச். சூசையப்பரின் பதக்கம், (வரவணிக்கப்) அவர் திருச்சுரூபம்முன் எரியும் விளக்குத்தைலம் முதலான திருப்பண்டங்கள் உள்ளதோர் மேசைக்குப் பின் நின்றுகொண்டு ஒருவர்பின் ஒருவராய் நோயாளரைவினவி அவரவருக்கு வேண்டியதைச் சொல்லிக்கொண்டுவந்தார். "சஞ்சூசையப்பர் பதக்கத்தாலே உன்னைஉரசிக்கொள்; அவருடைய தைலத்தைப்பூசித் தேய்த்துவிடு; நவநாட்செபஞ் செய்வாயாக" என்பதே அவர் அவர்களுக்குச் சொல்லியதின் பொழிப்பாகும். நவநாள் வேண்டுதல் செய்கிறவர்கள் நாடோறும் திவ்வியநன்மை உட்கொள்வதும், சிலுவைப்பாதை சுற்றுவதும், தங்களுக்குப் பிரீதியான உணவுப் பண்டங்களைக் குறைத்தோ, விலக்கியோ ஒறுத்துநடப்பதும் நலமாயிருக்கும் என்றும் வேறு சமயங்களிற் புத்திஎவியுமிருக்கிறார். இச்சமயத்திலே திடீரென அவருடைய கண்பார்வை அவர் முன் முடவிநின்றஓர் சப்பாணி மேற்சென்றது. உடனே "உனது கக்கதண்டங்களை இங்கேதா; இனிநட" என்றார். அவன் தான் குணப்பட்டுவிட்டதாய் உணர்ந்துகொண்டான். உள்ளத்திலே எழுந்த சந்தோஷ உணர்ச்சி மேலீட்டால் ஒருவார்த்தையும் சொல்ல இயலாதவனய் இராச குன்றில்நின்று தீவிரித்திறங்கி ஒரேஓட்டமாய்ஓடி முதல்சந்தித்த பயணக் கார் வண்டியிலே தொற்றி ஏறிக்கொண்டான். இப்புதுமையைக்கண்ட அனைவரும்ஆச்சரியத்தினலே ஸ்தம்பித்து நிற்கலானர்கள்.

(தொடரும்)

---

## "நீங்கள் அஞ்சவேண்டாம் ஏனெனில்......"

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேன், நான் (நெப்போலியன்) யாவரும் சாம்பிராச்சியங்களை உருவாக்கினேம். எதன்மேல்? பலாத்காரத்தின் மேல். அவை இன்று மாயமாய்மறைந்துவிட்டன. ஆனல், கிறிஸ்துநாதரும் ஒருசாம்பிராச்சியத்தை உருவாக்கினர். எதன்மேல்? அன்பில். அன்றும்இன்றும் அவருக்காக உயிரைஉதற உன்னிநிற்கும் முன்னணிவீரர் கோடானுகோடியாவர். எங்களைநினைப்பார் எவருமில்லை." மரணவாயிலில் மண்டியிட்டுக்கொண்டிருந்த பெரிய மன்னன் நெப்போலியனின்உரை இதுவாகும்.

மறக்கவில்லை கடந்தஉலகயுத்தத்தை. கர்வம் - அகங்காரம் - அக்கிரமம் தலைக்கேறி அழிவுப் பாதையில் தான்தோன்றித் தனமாகத்தாண்டவம் ஆடினனே அந்தஹிற்லர்— அவனையும்மறக்கவில்லை. மறக்கமுடியாது. "விரைவில் திருச்சபைக்கு சமாதி கட்டுவேன்"என்று வீண்மிரட்டல் பேசினனே. அந்தஹிற்லர் எங்கே? தானேகாலியானன், தனக்கென ஒருசமாதியின்றி— தடந்தெரியாதுமறைந்தான்.

இன்று நாடுகள்தோறும் ஒரு குழுவினர் — மஸ்கோ அடிவருடிகள் — நாஸ்திகப் பேர்வழிகள் கொக்கரிக்கின்றனர், "கடவுள், மோட்சம், நரகம், ஆன்மாயாவும் சுரங்கொண்டவன். கண்டகனுக்கள்"என்று. லெனினைக்கவிழ்க்க ஒருஸ்ராலின்—ஸ்ராலினுக்கு ஒரு மாலங்கோவ் — மாலங்கோவுக்கு ஒருகுருஷெவ். சரித்திரத்தை அலசிப்பார்ப்பவன் மறுப்பானு இதனை? நாமும் எமதுநாட்டிலே நம்முடையதிருமறைக்கு எதிர்ப்புகள்ஏற்பட்டுப் பலவித இடுக்கண்களுக்குள்ளாக நேரலாம். அப்போதெல்லாம் "நீங்கள்அஞ்சவேண்டாம்"என்று உத்தான ஞாயிறன்றுவானவன்கூறியதைக் கருத்திற்கொள்வோம். நமது உரிமைகள் பாதிக்கப்படும் போது நாம் கலங்கவேண்டியதில்லை. ஏனெனில், மரணத்தின் மீதும், தீமையின்மீதும் வெற்றி கொண்டவர் நம்மோடிருக்கின்றார்.

---

இறைவன் எமது உள்ளத்தில் இன்றேல், எமது பகல் இரவாகும்; அவர் இருப்பரேல் எமது இரவு எல்லாம் பகல். — அர்ச். பிரான்சிஸ் சேல்ஸ்

---

# செய்தியில் பரிசுத்த தந்தை

— தொகுப்பு: சா. பெ. —

### பரிசுத்த வாரத்தில்

பாரம்பரியமாகப் பாப்புமார் கையாண்டுவந்த பலசம்பிரதாயங்களை உதறித்தள்ளித் தமக்கென ஓர் தனிவழி வகுத்துக்கொண்ட அருளப்ப பாப்பரசர் பரிசுத்தவாரத்திலும் இதுவரை இருந்துவந்த வழக்கத்தைவிடுத்து வத்திக்கானுக்கு வெளியேயுள்ள பல ஆலயங்களிலும் நடைபெற்ற திருச்சடங்குகளில் கலந்துகொள்ளலாயினர். அவ்வாரத்தில் சாதாரண குருமாரைப் போலத் தாமும் உபவாசம் அனுட்டித்து றோமைமக்களுடன் தாமும் ஒருவராகப் பல தேவாலயங்கட்கும் கால்நடையாக ஊர்வலமாகச்சென்று வேண்டுதல்களிலே பங்குபெற்றுக் கொண்டார்.

பெரியவியாழனன்று லத்தறன் அருளப்பரின் மகாதேவாலயத்தில் திருச்சடங்குகளை நிறைவேற்றிய பரிசுத்த தந்தை பதின்மூன்று குருமாரின் பாதங்களைக்கழுவி அவற்றைமுத்தமிட்டார். பிந்தஅவர்கள் ஒவ்வொருவருக்கும் தங்கப்பதக்கங்களை அன்பளிப்பாக வழங்கினர்.

பெரிய வெள்ளிக்கிழமை திருச்சிலுவை மகாதேவாலயத்திற்கு விஜயஞ்செய்து சிலுவையை மந்திரிப்பதுடன் கூடிய சகல திருச்சடங்குகளையும் நிறைவேற்றினர்.

உயிர்த்தஞாயிறன்று பரிசுத்தபிதா அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்தில் மகாபாடற்பூசை நிறைவேற்றினர். அன்றுபகல்அம்மகாதேவாலயபலகணிவாயில் மாடிமுன்பாகக் கீழே தம்மை எதிர்நோக்கிநின்ற லட்சக்கணக்கானமக்களுக்குத் தரிசனமிந்து தமது ஈஸ்றர் செய்தியை ஒலிபரப்பிய பின் றோமைநகருக்கும், அகிலமுழுவதுக்கும் அருளப்படும் "ஊர்பி எற் ஓர்பி" எனப்படும் ஆசீர்வாதத்தை வழங்கினர்.

### மறியற்காரரின் ஞாபகமலரில்

றோமைநகரிலுள்ள றெஜீனு சேலிச் சிறைச்சாலைக் கைதிகளால் நடத்தப்பட்டுவரும் அச்சகமானது, பாப்பரசர் கடந்தவருட இறுதியில் அர்ச். மூடியப்பர் திருநாளன்று அச்சிறைச்சாலைக்கு வருகைதந்ததின் ஞாபகமலர் ஒன்றைப் பிரசுரித்துள்ளது. இம்மலரில் பாப்பரசரது விஜயத்தின்போது எடுக்கப்பட்ட பிரதிமைப் படங்களும், அவரின் சொற்பொழிவும், மறியற்காரருக்கென அவர்செய்த வேண்டுதலகளும், சிறைக்கைதிகளின் உணர்ச்சி ததும்பிய சொற்பொழிவுகளும் இடம் பெற்றுள்ளன.

### பரலோக பாதுகாவலரின் திருநாளில்

தாம் பெயர்கொண்ட அர்ச். சூசையப்பர் திருநாளைப் பரிசுத்த தந்தை சென்ற பங்குனி 19-ந் திகதியன்று விமரிசையாகக் கொண்டாடினர். அவர் மேற்றிராணித்துவ பதவிக்கு உயர்த்தப்பட்ட 34-வது ஆண்டுவிழாவும் அன்றுதினமேயாகும். றோமைநகரின் வீதிகளைச் சுத்தம்செய்யும் தொழிலாளர்களுக்கென அன்றுகாலை அவர் திவ்வியபூசைப்பலி நிறைவேற்றினர். பதினைந்து குருமாரின் உதவியோடு திவ்விய நன்மையளித்த பரிசுத்ததந்தை இறைவனருளால் தாம் அடுத்தஆண்டிலும் சீவனேடிருந்தால் அத்தொழிலாளருக்காகத் திவ்விய பூசைநிறைவேற்ற மறக்கமாட்டாரென வாக்குப்பண்ணினர்.

அன்று மாலைநேரம் அர்ச். பேதுருவானவர் மகாதேவாலய சதுக்கம் லூர்துபதியின்காட்சியை நினைவுறுத்தியது. 250 செஞ்சிலுவைச்சங்க இரதங்களும், 80 தொண்டர்படையின் வண்டிகளும், கார்கள், பஸ்வண்டிகள், லொறிகள் என்பனவும் றோமைநகரின் பலபாகங்களிலுமுள்ள வைத்தியசாலைகளிலும், வயோதிபர் சாலைகளிலும், அநாதர்மடங்களிலும், மற்றும் தனிப்பட்ட வீடுகளிலுமிருந்து நோயாளர்களை அர்ச். பேதுருவானவர் மகாதேவாலய முன்றிலுக்குக் கொணர்ந்து சேர்த்தன. சாரணச் சிறுவர்களும், வழிகாட்டுஞ் சிறுமிகளும், இளைஞர் முன்னணிகளும், கன்னியர்களும், தாதிமாரும், விசுவாசப்பரப்புதற் கல்லூரி மாணவரும் நோயாளரை அணிவகுப்பதில் மிகுந்த பிரயாசை எடுத்தனர்.

சடுதியில்ஆர்ப்பரிப்புகள்தோன்றின. ஆம், பரிசுத்ததந்தை தமது சிவிகையாளர்களால் சுமக்கப்பட்டு நோயாளர்கள்மத்தியில் வந்துகொண்டிருந்தார், அவர்கள் மத்தியில் சிவிகை வந்ததும் அதிலிருந்து அவர் இறங்கி நோயாளிகளினூடாகச் சென்று புன்னகையோடு அவர்களுடன்பேசிக்கொண்டே சென்று ஈற்றில தமது ஆசிரளித்தார்.

—※—

# பொது வர்த்தமானம்

### சித்திரை 12-ந்திகதி

23-ம்அருளப்ப பாப்பரசர் தமது ஆளுகையிலே முதல்இரு அர்ச்சியசிட்டர்களை நிகழும்சித்திரைமாதம் 12-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பிரகடனஞ் செய்யவிருக்கின்றார். அன்றுதினம் ஓர் ஸ்பானிய கன்னியாஸ்திரியாயிருந்து 1854-ம்ஆண்டுமரித்த முத். யுவக்கினதே வெத்றாஞவும், ஓர்இத்தாலிய கப்புச்சின் சபைக் கன்னியாசியாயிருந்து 1670-ம்ஆண்டுமரித்த செஸ்லோநகரின் முத். சாள்ஸும் அர்ச்சியசிட்டபட்டம் சூட்டப்படுவார்கள். இவ்விருவருக்கும் சென்றகார்த்திகைமாதம் 23-ந்திகதியன்று அர்ச்சியசிட்டபட்டம் சூட்டுதற்கானஆயத்தம் நடைபெற்றுவந்தது. ஆனல், 12-ம்பத்திநாதபாப்பானவரின் மரணத்தாலும், 23-ம்அருளப்ப பாப்பானவரின் தேர்தலாலும் திருப்பட்டவைபவம் பின்போடப்படலாயிற்று.

### சித்திரை 12-ந்திகதி

அகிலமுழுவதிலுமுள்ள பங்குக்குருமாரின் பாதுகாவலரான அர்ச். கூரேதார்ஸின் ஞாபகார்த்தமாக அவரின் சென்மநாடாகிய பிரான்ஸ்தேசத்திலும் பெருவிழாக்கள் நடைபெறவிருக்கின்றன. நிகழும் சித்திரைமாதம் 12-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அர்ச்சியசிட்டரின் புனிதஇருதயம் பரீஸ்மாநகரிலுள்ள நோட்றேடாம் ஆசனக்கோவிலில் பூச்சியமாகஸ்தாபித்து வணங்கப்படும். பிந்தஅது 25பிரான்ஸிய ஆசனக்கோவில்களுக்கு ஊர்வலமாகஎடுத்துச் செல்லப்படும்.

### சித்திரை 26-ந்திகதி

புதியபாப்பரசரின் ஆளுகைகாலத்திலே முதலாவது முத்திப்பேறுபெற்றபட்டம் நிகழும்சித்திரைமாதம் 26-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அருளப்படவிருக்கிறது. அன்று திருச்சிலுவைக் கன்னிகா தியாகிகள்சபையை — அதாவது அர்ச். சிற்றம்மாள்சபையென்று பிரஸ்தாபமாக அறியப்படுகின்ற கன்னிகாசபையை அடியிட்டவரான சிஸ்றர் எலேனு குவெரு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப்படுவாள். ஓர் இத்தாலியசாதியினளான இவள் 1914-ம் ஆண்டு காலஞ்சென்ருள்.

# அங்கும் இங்கும்

## நிர்ப்பந்திக்க முடியாது

"அரசாங்கத்தின் தவறான மொழிக் கொள்கை, கல்விக் கொள்கையினால் நாங்கள் பழிதேடிக் கொள்ளப்படாது. தமிழ்ப்பிள்ளைகளைச் சிங்களம்படிக்கும்படி நாங்கள் நிர்ப்பந்திக்க முடியாது. அவர்கள் தமிழ்படிக்க விரும்பினால் அவர்களை அனுமதித்தேதீரவேண்டும்."

திரு. பிரான்சிஸ் பெரேரு,
கம்பஹாப் பட்டினசபைத் தலைவர்

## ஆனையிறவிற்குத் தெற்கே

"யாழ்ப்பாணத்திலுள்ள அநேக இளம் விவசாயிகள் குடியேற்றமுயற்சியில் ஈடுபட வேண்டுமென்று கமத்தொழிற்பகுதி எதிர்பார்க்கின்றது. இந்தவாலிபர்களின் வருங்காலம் ஆனையிறவிற்குத் தெற்கேதான் உள்ளது. வவுனிக்குளத்திலும், அக்கராயன் குளத்திலும் ஆளுக்கு ஐந்துஏக்கர் காணிகள் வழங்கப்படுகின்றன."

திரு. எஸ். கனகரத்தினம்,
வடபகுதி விவசாய விஸ்தரிப்புஅதிகாரி

## கட்சியின் பொருளாதாரத் திட்டம்

"இலங்கைத் தமிழரசுக்கட்சியிடம் உருப்படியான பொருளாதாரத் திட்டம்இல்லையென்று சிலர்கூறுகிறார்கள். தமிழர்களுக்கென ஓர் தனியாட்சி இந்நாட்டில் ஏற்படும்பொழுது நாங்கள் வெளியிடும் பொருளாதார விருத்தித்திட்டங்கள் வடக்கு—கிழக்கு மாகாணங்களைப் பொன்விளையும் பூமிகளாக மாற்றிவிடும் சக்திவாய்ந்தன. இப்பொழுது அவைகளை வெளியிடுவதில் அதிகபலன் இல்லை."

திரு. எஸ். இராசதுரை,
மட்டக்களப்பு எம். பி.

## அரசியற்கட்சிகள் மிகஅதிகம்

"பல்வேறு அரசியற் கட்சிகளின் போட்டிகளால் நாட்டின்முன்னேற்றம் தடைப்பட்டுள்ளது. இந்நாட்டின் விஸ்தீரணத்திற்கு அரசியற் கட்சிகள் மிகஅதிகமாகிவிட்டன. மக்கள் ஒன்றுபட்டு வாழ்ந்தால்தான் நாடும் முன்னேறும். கட்சிப் பாகுபாடுகள் அழிவுப் பாதைக்கே அழைத்துச்செல்கின்றன. பணக்காரரை இல்லாமல் பண்ண வேண்டுமென்று அரசியல்வாதிகள் சிலர் கூறுகின்றனர் இது தவறு. ஏழைகள்தான் பணக்காரராய்வர முயற்சிக்கவேண்டும். வேலைநிறுத்தங்களில் தொழிலாளர் ஈடுபடக் கூடாது. இதனால் நட்டம்அடைபவர்கள் தொழிலாளர்கள்தான்."

திரு. ஆர். ஈ. ஜயதிலகா,
நாவலப்பிட்டி எம். பி.

## மந்திரிசபைப் பிற்போக்குவாதிகள்

"மந்திரிசபையிலுள்ள பெரும்பாலானவர்களைப் பிற்போக்கு வாதிகளென இன்னுமே சிலமந்திரிகள் அழைக்கிறார்கள். மந்திரிசபையிலுள்ள இந்தஇரண்டொருவரும்தான் உண்மையான பிற்போக்கு வாதிகள். அரசாங்கத்தின் கொள்கையான சோஷலிஸத்துக்கு இவர்கள் முட்டுக்கட்டையாய் இருக்கிறார்கள். கம்யூனிஸ்த ஆட்சிஒன்றின்கீழ் மக்கள் இராணுவத்தைக்கொண்டும், பொலிஸ்படையைக் கொண்டும் ஆளப்படுவார்கள். கம்யூனிஸ்த கருத்துகளைக்கொண்ட சிலர் மந்திரிசபைக்குள்ளும், எம். ஈ. பி. கட்சிக்குள்ளும் தந்திரமாகப் புகுந்துவிட்டார்கள். ஆனால், கம்யூனிஸ்தர்கள் சொல்லுகிறபடி நாட்டை ஆள்வதற்குப் பொதுமக்கள் எம். ஈ. பி. கட்சிக்கு அதிகாரம் எதுவும் அளிக்கவில்லை. மந்திரிசபையிலே கம்யூனிஸ்த அபிப்பிராயங்கொண்ட மந்திரிகள் இருக்கும்வரை மந்திரிசபையில் கலவரமும், குழப்பமும் இருந்தேதீரும். ஆனால், கம்யூனிஸ்த பாதையிலசெல்ல எம். ஈ. பி. கட்சி தயாராயில்லை."

ஜனாப் சி. ஏ. எஸ். மரைக்கார்,
தபால்—வானொலி மந்திரி

## நியாயமாகுமா? சரியாகுமா?

"பொலிஸ் பகுதிக்குத் தலைமை வகித்துநடத்தப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனறல் திறமையற்றவராக விருந்தும் அந்தப் பதவியிலேயே அவரை வைக்குமாறு கோரிப் புத்தபிக்குகள் கூட்டங்கள் நடத்துவது நியாயமாகுமா? இந்நாட்டின் தலைவரென்ற முறையில் வேலைசெய்ய வேண்டியது பிரதமரின் கடமையாகும். எந்த வட்டாரத்திலிருந்தும் வெளியார் இந்த வேலையில் தலையிடக்கூடாது. அரசாங்கம் அமைதியாக நடைபெறுவதற்குக் குந்தகம் விளைக்கவும், அதற்குச் சங்கடம் உண்டுபண்ணவும் புத்தபிக்குகள் கூட்டங்கள் நடத்துவது சரியாகுமா?"

பிரதமர் பண்டாரநாயகா

## மாக்ஸியவாதிகளும் அரசாங்கமும்

"அரசாங்கக்கட்சியிலுள்ள மாக்ஸியவாதிகள் தங்கள்சுயநலனுக்காக அன்றேல் தாங்கள் வெற்றிபெறுவதற்காக ஓர் பிளவை உண்டுபண்ணி அரசாங்கத்தைக் கவிழ்க்க முயற்சிசெய்த போதிலும் ........ பிறநாடுகளில் மாக்ஸியவாதிகள் அரசாங்கத்திற்குள் நுழைந்து அதனை முறியடித்திருப்பது நமக்குத் தெரியும். தங்கள் கடமையை எவ்வாறு புரியவேண்டுமென்பது மந்திரிகளுக்கு நன்றாகத்தெரியும். எனவே, தீவிரவாதிகள் அரசாங்கத்தை முறியடிக்கச் செய்துவரும் முயற்சிகளுக்கு நாங்கள் இடங்கொடுக்கமாட்டோமென உறுதிகூறுகிறேன்."

ஜனாப் சி. ஏ. எஸ். மரிக்கார்,
தபால் - வானொலி மந்திரி.

## குறைகூறும் வழக்கம்

"இங்கே எந்தத்தவறுக்கும் மற்றவர்கள்தலையில் பழிசுமத்தும் பழக்கம் கடந்த இரண்டு அல்லது மூன்றுவருடங்களில் இலங்கைக்கே உரியதான ஓர் தேசியவழக்கம் ஆகிவிட்டது. வேண்டுமானால் தவறுகளை எடுத்துக் காட்டுங்கள். அந்தத் தவறுகளுக்கு யார் தலைமேல் பழியைப் போடலாமென்று வழிதேடுவார்கள். எமது கல்விமுறை சரியல்லவென்று சுட்டிக் காட்டுங்கள். அந்நியரின் ஆதிக்கமே அதற்குக் காரணமென்று உடனே சொல்லிவிடுவார்கள். அந்நியர் ஆதிக்கத்தின்மீது பழியைச் சுமத்திவிடுவார்கள். எங்கள் குறைபாடுகளுக்கு அந்நியரையே குறைகூறும் வழக்கம் வேரூன்றிவிட்டது."

திரு. எஸ். ஏ. விஜயதிலகா,
ஆனந்தாக்கல்லூரி அதிபர்

## கம்யூனிஸ்தர்களின் வலையில்....

"அரசாங்கத்தின்மீதுள்ள நம்பிக்கையை மக்கள் இழந்துவிட்டனர். இப்பொழுது நீங்கள் பின்வருமாறு சிந்திக்கலாம். யு. என். பி. ஆட்சிக்கு ஏலவே சந்தர்ப்பம் கொடுத்தாகி விட்டது. எம் ஈ. பி. க்கும் இப்பொழுது சந்தர்ப்பம் அளித்தாகிவிட்டது. இனிக் கம்யூனிஸ்தர்களுக்கு ஓர் சந்தர்ப்பம் அளிக்கலாமென்று நீங்கள் சிலவேளை நினைக்கலாம். ஆனால், இவ்வித தீவிர நடவடிக்கையில் நீங்கள் இறங்குமுன் சிந்தித்துப்பாருங்கள். உங்களைச்சூழவுள்ள இன்றையஉலகை உற்றுநோக்குங்கள். திபேத்தைநோக்குங்கள். கம்யூனிஸ்தசீனு அதைச் சிதைத்துவருகிறது. ஹங்கேரியின் நிலை அதற்கு ஏற்பட்டுள்ளது. கடந்த காலத்தில் ஏகாதிபத்தியங்களுக்கு அடிமைப்பட்டுப் பிறகு சுதந்திரம் அடைந்தோம். இப்பொழுது கம்யூனிஸ்த ஏகாதிபத்திய ஆபத்துத் தோன்றியிருக்கிறது. நமது தலாய்லாமாவின் கதியை நோக்குங்கள். ஆகவே, இந்தஅரசாங்கத்தின்மீதுள்ள வெறுப்பால் கம்யூனிஸ்தர்களின் வலையில் சிக்கிவிடாதீர்கள்."

திரு. டட்லி சேனநாயகா
முன்னைநாள்பிரதமர்

## எதிர்கால நம்பிக்கை

"இந்நாட்டில் வாழும் தமிழர்கள் துறைமுகத் தொழிலாளராயினுஞ் சரி, தோட்டத் தொழிலாளராயினுஞ் சரி, அரசாங்க ஊழியர்களாகிலும்சரி, ஆசிரியர்களாகிலும் சரி அனைவரும் தாங்கள் தமிழர்களென்ற உணர்ச்சியுடன் அரசியல் நடவடிக்கைகளில் ஒற்றுமையுடன் ஈடுபட்டால்தான் எதிர்காலத்தில் நம்பிக்கைகொள்ளமுடியும்."

திரு. எஸ். சிவபாதசுந்தரம்,
பரமேஸ்வரக்கல்லூரித் தலைமைஆசிரியர்

## இப்போது சமயப்பிளவு

"பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனறலின் விவகாரம் நடைபெற்றமுறையைப் பார்க்கும்பொழுது பலத்த சந்தேகங்கள் கிளம்புகின்றன. எந்த ஒரு அதிகாரியைப் பிரதமர் போற்றிப்பாராட்டினரோ அவரையே இருந்தாற்போல் தகுதியற்றவரென்றுகூறி வேலைநீக்கஞ் செய்தது அரசியல் அடிவானத்தில் பெரும் கொந்தளிப்பையும், கிளர்ச்சியையும் உண்டுபண்ணியிருக்கிறது. இந்த அரசாங்கத்தின் கொள்கை இப்போது நன்கு புலப்படுகிறது. முதலாவதாக மொழிப்பிளவைக் கொண்டுவந்தது. பின்னர் இனப்பிளவைக்கொண்டுவந்தது. இப்பொழுது சமயப்பிளவை உண்டுபண்ணுகிறது."

திரு. மெறில் பெர்னாண்டோ,
மொறட்டுவா எம். பி.

## பிரதமரும் புத்தபிக்குகளும்

"எனது கருத்துப்படி நாட்டைஆள எனக்குச் சுதந்திரம் இருக்கவேண்டும். எனது பதவிகாலம் முடிவாகுமுன் என்னை வெளியேற்ற யாருக்கும் அதிகாரம் இல்லை. திரு. ஒஸ்மன்ட் டி சில்வாவைப் பொலிஸ்இன்ஸ்பெக்டர் ஜெனறல் பதவியில் தொடர்ந்து வைத்திருப்பதின்மூலம் புத்தசமயம் அபிவிருத்தியடைந்துவிடுமா? பொறுப்புவாய்ந்த புத்தபிக்குகள்கூட இவ்வித மடமைத்தனமாகப் பேசுவது விசித்திரமாயிருக்கிறது. முன்னொருகாலத்தில் இருந்ததுபோல இன்று இலங்கையில் உண்மையான புத்தசமயத்தைப் பின்பற்றுபவர்கள் இல்லை. இலங்கையிலே புத்தசமயத்தின் சீர்குலைவுக்குப் புத்தர்களே காரணமன்றிப் புத்தமதக் கோட்பாடுகள் காரணமல்ல."

பிரதமர் பண்டாரநாயகா

## சமயமும் உத்தியோக பதவியும்

"இதுதான் நாம்நோக்கிச்செல்லும் ஜனநாயக லட்சியமா? ஒருபதவிக்கு ஒருகுறிப்பிட்ட சமயத்தைச் சேர்ந்தவரே நியமிக்கப்பட வேண்டுமென்ற கொள்கையை அரசாங்க தலைவரான பிரதமர் கைக்கொண்டு நடப்பாரேயானால் சமயதுவேஷம் கொழுந்துவிட்டெரிய ஆரம்பித்துச் சென்றஆண்டின் வைகாசி, ஆனிச் சம்பவங்களை விட மோசமான சம்பவங்கள் நிகழும்படியான நிலைமை ஏற்பட்டுவிடும். நாள்தோறும் ஏற்பட்டுவரும் நெருக்கடிக்கு மேல் நெருக்கடியான நிலைமைகளுக்குள் அரசாங்கம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஒவ்வோர் துறையிலும் சீர்கேடான நிலைமை ஏற்பட்டுள்ளது. இறுதியாகப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனறலின் நியமனப் பிரச்சினையால் பொலிஸ்படைக்குள் அதிருப்தியும், பொதுவாக நிர்வாகத்தில் சீர்கேடுகளும் ஏற்பட்டுள்ளன. ஒருமதத்தைச் சேர்ந்தவர்தான் ஒருபதவியை வகிக்க வேண்டுமென்ற யோசனையை நாம் முதல்தடவையாக இப்பொழுதுதான் கேள்விப்படுகிறோம்."

திரு. டட்லி சேனநாயகா,
முன்னைநாள் பிரதமர்

---

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

சங். அல்போன்சா கன்னியாஸ்திரியிடம் யான் இரந்துகேட்ட கருமங்கள் யாவும் அனுகூலமாயின. நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன். அவவின்புகழ் எங்கும், என்றும் நிலவுவதாக

—ஓர் பக்தன்

## அகில உலக அகதிகள் வருடம்

1945-ம்ஆண்டுமுதல் 4கோடிக்கு மேற்பட்ட மக்கள் தங்கள்வீடுவாசல்களிலிருந்து தப்பியோடிப் பிறநாடுகளுக்குச்சென்று அகதிகளாய் இருந்து வருகிறார்கள். இவர்களில் மிகஅதிகமானோர் கிழக்குஐரோப்பிய நாடுகளிலும், சீனு, கொறியா, வியெற்னும்முதலாம் தூரகிழக்கு ஆசியநாடுகளிலும் கம்யூனிஸ்த ஆக்கிரமிப்புக்காரணமாக அகதிகளானவர்கள். இவர்கள்போரால் "உலகஅகதிகள் வருடம்" ஒன்றை நடத்த ஐக்கியநாடுகளின் ஸ்தாபனம் அங்கீகாரம் அளித்திருக்கிறது. இது நிகழும் 1959-ம் ஆண்டு ஆனிமாதம் ஆரம்பமாகவிருக்கிறது. இதன்நோக்கம், ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் கம்யூனிஸ்தர்களின் ஆதிக்கத்தில் இருந்துவருகின்ற நாடுகளிலிருந்து மாதந்தோறும் இன்னுமேஒளித்துத் தப்பியோடிக் கொண்டிருக்கின்ற பல்லாயிரக்கணக்கான அகதிகளின் அபாயகரமான பயங்கரநிலைமட்டிலே உலகின்கவனத்தை ஈர்த்துகொள்வதும், அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கான சுயமுயற்சிகளைக் கையாளச்செய்வதுமேயாம்.

முன்சொன்ன அகதிகளைத்தவிர மத்தியகிழக்குநாடுகளில் ஏறக்குறையப் பத்துலட்சம் அராபிய அகதிகள் இருக்கின்றார்கள். மேலும், இரும்புத்திரைக்குப் பின்னுள்ள நாடுகளிலிருந்து மக்கள்இன்னுமே அகதிகளாகஒளித்துத் தப்பியோடுகின்றார்கள். போலிஷ்காரர் ஸ்காண்டிநேவியாவுக்கும், மேற்குஐரோப்பியநாடுகளுக்கும், ஹங்கேரியர் ஆஸ்திரியாவுக்கும், கிழக்கு ஜேர்மனியர் மிகப்பெருந்தொகையாக மேற்குஜேர்மனிக்கும், யூகோசிலேவியர் ஆஸ்திரியா, பிரான்ஸ், இத்தாலிக்கும் தப்பியோடிக்கொண்டிருக்கிறார்கள். ஐக்கியநாடுகளின்ஸ்தாபன அகதிகள்கம்மிஷனரின் அறிக்கைப்படி கடந்தநான்குவருடங்களிலும் அகதிகள்சனத்தொகை 3,00,000 புதிய அகதிகளாலே அதிகரித்திருக்கிறது. இவர்களில் பெருந்தொகையினர் ஹங்கேரியர்களே. ஆனால், கடந்தநான்கு வருடங்களிலும் 4,40,000 அகதிகளின் பிரச்சினை நிரந்தரமாகத் தீர்த்துவைக்கப்பட்டிருக்கிறது.

ஆயினும், மிகப்பெருந்தொகையான அகதிகளின்பிரச்சினை இன்னும்தீர்த்துவைக்கப்படாமலே இருக்கின்றது. இவர்களிலே ஆஸ்திரியா, பிரான்ஸ், ஜேர்மனி, கிறீஸ், இத்தாலி, துருக்கி எனும் நாடுகளிலுள்ள 1,20,000 அகதிகளும், ஆஸ்திரியாவிலும், இத்தாலியிலும் கூடாரங்களிலே சஞ்சரிக்கின்ற சுமார் 20,000 அகதிகளும், ஹொங்கோங்தீவிலுள்ள 10லட்சம்சீன அகதிகளும் இன்னும் ஓர்கரைப்படாது அந்தரநிலையிலே இருந்துவருகிறார்கள். அதனால் இவர்களுக்கெல்லாம் கஷ்டநிவாரணம் அளிக்கும் விஷயமாய் "உலகஅகதிகள் வாரம்" ஒன்றை நடத்தவேண்டுமென்று ஐக்கியநாடுகளின் பொதுமகாசபைக் கூட்டத்திலே பத்து நாடுகள்சேர்ந்து கொண்டுவந்த பிரேரணையை அச்சபையிலுள்ள கம்யூனிஸ்தநாடுகளின் அங்கத்தவர்கள் எட்டுப்பேரும் எதிர்த்துவாக்களித்தும் அவர்கள்பாடு பெருந்தோல்வியாயிற்று.

---

● 1956-ம்ஆண்டு கார்த்திகைமாதம் நடந்தேறிய ஹங்கேரிய சுதந்திர எழுச்சிக் கலகத்தின்போது கருதினல் மிண்ட்சென்றிஆண்டவரும், அவரின் காரியதரிசியான வண. எகோன் ரோச்சன்பிசுவாமியாரும் ஒருங்கே புடாபெஸ்ந்நகரிலுள்ள அமெரிக்க தூதுவாலயத்தில்அடைக்கலம்புகுந்தார்கள். ஆனால், பிந்தச் சுவாமியார் அதைவிட்டுவெளியேறியதும் கைதுசெய்யப்பெற்று நீதிஸ்தலத்தால் சிலபரியந்த சிறைத்தண்டனை விதிக்கப்படலாயினர்.



# புனிதவீரர் பக்கம்



*அருமைச் சகோதரங்களே !*

சென்ற பங்குனிமாதம் 9-ம் தேதி மாணவர்களின் அர்ச்சிய சிஷ்டர் புனித தோமினிக் சாவியோவின் திருநாள். அவரது சரித்திரத்தை வாசிக்காவிடில் சீக்கரத்தில் வாசிக்கப்பாருங்கள்.

தோமினிக் சாவியோ தனது ஐந்தாவது வயதிலேயே பூசைக்கு உதவிசெய்தார். அதற்காக அதிகாலையில்தானே ஆலயத்திற்குச் செல்வார். ஆலயக்கதவு பூட்டியிருந்தால் வெளியில்தானே முழந்தாட்படியிட்டுச் செபிப்பார்.

அர்ச். யோண்போஸ்கோவின் பள்ளியில் பயிலும்போது தன் உடன்மாணவர்களுக்கு எவ்வளவோ நன்மைகள் செய்துள்ளார்—சனிக்கிழமை பாவசங்கீர்த்தனம் செய்யவேண்டுமென்று அநேக மாணவர்களைத் தூண்டியதோடு அதற்கு வேண்டிய உதவியையும் செய்தார். கெட்டபுத்தகம், படங்களைக் கண்டால் அவைகளைக் கிழித்தெறிவார். தன்கண்களை மிகவும் அடக்கியாண்டார். ஒரு தடவை மாணவர்கள் அவர் உலககாட்சிகளைக் கண்களால் இரசிப்பதில்லை என்று குறைகூறினர். சாவியோ தன்கண்கள் வானுலகக் காட்சிகளைக்கண்டு களிப்பதற்காக உண்டாக்கப்பட்டவை என்று பதிலளித்தார்.

குருவாக வேண்டுமென்பது சாவியோவின்ஆசை. ஆனால், தேவன்சித்தம்வேறு. அவரது உடல்நிலை மிகவும் மோசமானது. சிறுவயதில்தானே அதாவது தமது 14-ம் வயதில் 1857-ம் ஆண்டு பங்குனி 9-ம் நாள் இவ்வுலகைத் துறந்தார். மறுவுலகு சென்றார்.

இன்று அவர் ஒரு அர்ச்சியசிஷ்டர். ஆம், பள்ளிமாணவர்களின் புனிதர். புனிதவீரராகிய நீங்களும் புனிததொமினிக் சாவியோவைக் கண்டுபாவிக்க வேண்டாமா? அவரைப்போன்று புனிதராகமுயற்சி எடுங்கள்.

அண்ணா.

—(⌒)—

## விகட விநோதம்

**நாஸ்திகன் :** கடவுள் என்றவஸ்து ஒன்று கிடையாது. நாமே கடவுள்; நம்மால் ஆகாதது ஒன்றுமில்லை.

**கூட்டத்தில் ஒருகுரல் :** அப்படியானால் தாங்கள் இப்பொழுதே இறந்துபோய் மீண்டும் உயிர்பெற்று அதனைக் காண்பியுங்கள்.

*　*　*

**சொந்தக்காரன் :** "இந்தத் தோட்டத்தில் மீன்பிடிக்கக்கூடாது" என்றெழுதியிருக்கும் விளம்பரத்தைப் பார்க்கவில்லையா?

**சிறுபையன் :** நான் தோட்டத்தில் மீன்பிடிக்கவில்லை. தண்ணீரில் மீன் பிடிக்கிறேன்.

*　*　*

**உபாத்தியாயர் :** அடே, சுந்தரம் நீ நல்லபையனாச்சே. ஏன் இவ்வளவு நேரம் பொறுத்துவந்தாய்?

**சுந்தரம் :** சார், நீங்கள் நேற்றுத்தானே "நல்லபையன் மெல்லப் போவான்" என்று சொன்னீர்களே.

எம். கே. ஜே. ஜேம்ஸ்,
அர்ச். மாட்டீனர் குருமடம்.

## அர்ச். பிளாய்ஸ்

இவர் 1500 வருடங்களுக்கு முன் சீவித்தவர். இவர் ஒருமேற்றிராணியார். வேதகலாபனை காலத்தில் விரோதிகளால் பிடிபட்டு மறியலில் அடைபட்டார். இவர் மரிப்பதற்கு முன் ஒரு சிறு பையனை அவரிடம் கொண்டுவந்தார்கள் அவனுடைய தொண்டைக்குள் மீன் முள் ஒன்று பொறுத்திருந்தது. அப்பையன் கடும் வேதனைப்பட்டுக்கொண்டிருந்தான். இந்த அர்ச்சியசிஷ்டர் அவனைக் குணப்படுத்தினார். இன்றும் நாம் இதை நினைவுகூருகிறோம். அவருடைய திருநாளில் எங்கள் தொண்டைகளையும் ஆசீர்வதிப்பிக்கிறோம். அவர் மரிப்பதற்குமுன் பலவிதமாகவும் அவரை உபாதித்தார்கள். இரும்புச் சீப்புகளால் அவரைக் கிழித்தார்கள். அவருடைய விசுவாசம் மேலும் உறுதியானது. வேதத்துக்காக உயிரைக் கொடுத்து வேதசாட்சிமுடி பெற்றார். இவரது திருநாள் மாசிமாதம் 3-ந் திகதி கொண்டாடப்படுகின்றது.

—(⌒)—

## அப்போஸ்தலர்கள்

உலகில் சமாதானத்தை நிலைநாட்ட அநேகர் பாடுபடுகின்றனர். சிலர் உண்மையாகவே உழைக்கின்றனர். வேறுசிலர் பேச்சளவில்மட்டும் சமாதானம் வேண்டுமென்பர்—செயலளவில் வேறுபடுவர். ஆனால், உண்மையில் உலகில் சமாதானம் நிலவவேண்டுமானால் கிறிஸ்துநாதர் இவ்வுலகில் ஆளவேண்டும். கிறிஸ்து உலகைஆள, நீயும்நானும் சேர்ந்து உழைக்கவேண்டும். நாம் யேசுவை விசுவசிக்கிறோம். அவர்ஏற்படுத்திய சத்தியசபையில் நிலைத்திருக்கிறோம். வாராந்தவருமல் கோவிலுக்குப் போகிறோம். பாவசங்கீர்த்தனஞ் செய்கிறோம். பரமதிவ்வியநற்கருணையை அடிக்கடி வாங்குகிறோம். நாம் மற்றவர்களுக்குத் துன்பம்கொடுக்காமல் நல்லசீவியம் சீவிக்கிறோம்.

சொல்ல வேண்டுமானால் மேலே கூறியது நல்லது. ஆனால், அது போதாது. நாம்மாத்திரம் நல்லவர்களாய் இருந்தால் போதாது. உண்மையிலே நாம் யேசுவை நேசித்தால், மற்றவர்களுக்கு உதவிசெய்யவேண்டும். யேசு எல்லோருக்காகவும் கல்வாரியாலைமீது இரத்தம் சிந்தினார். எல்லோரும் சத்தியதிருச்சபையில் சேரவேண்டுமென்றும், எல்லோரும் மோட்சத்திற்கு வரவேண்டுமென்றும் விரும்புகிறார். மற்றவர்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்பதே யேசு நம்மிடம் எதிர்பார்ப்பது.

## தற்கால திஸ்மாஸ்

மங்கேலியாநாட்டில் நூற்றுக்கணக்கான திருடர்கள் கூட்டம் கூட்டமாய் வசிக்கின்றனர். அவர்கள் செல்லுமிடமெல்லாம் செய்துவரும் அக்கிரமங்கள் சொல்லுந்தரமன்று. அவர்களைக் கண்டால் எவருமே பயப்படுவார்கள். ஏனெனில், அவர்களால் உடைமைகளையும், உயிரையும் இழந்தவர்கள் அநேகர்.

இத்திருடரில்ஒருவன் ஓர்வீட்டைக் கொள்ளையடிக்கச் சென்றான். அது கிறீஸ்துவர்கள் வசித்தவீடு. அங்கு மிகஅழகிய பாடுபட்ட சுரூபம்ஒன்று இருந்தது. மங்கேலியருடைய வீடுகள்டலவற்றில் பாடுபட்ட சுருபங்களை அவன்பார்த்திருந்தான். அந்தச் சுரூபங்களுக்கு ஏதோ இரகசியசக்தி இருக்கவேண்டுமென அவன்நினைத்தான். இந்த அழகிய சுரூபத்தை உடைத்துச் சேதமாக்க அவனுக்கு மனம்வரவில்லை. அதைத்தன்னுடன் எடுத்துச் சென்றதுமன்றி, தன்சட்டைக்குள் அதைக்கழுத்தில் அணிந்துகொண்டான். அன்றிலிருந்து அவன்தொட்டதெல்லாம் அனுகூலமாய் முடிந்தன. அவனைப் பிடிக்க விரிக்கப்பட்ட பலவலைகளினின்று அதிசயிக்கத் தக்கவிதமாய் தப்பி வந்தான்.

கடைசியாக ஓர்நாள் அவன் அகப்பட்டான். மார்பில் துப்பாக்கியால் ஒருவன் அவனைச் சுட்டான். குண்டு பாடுபட்ட சுருபத்தைச் சேதமாக்கியது. அவனுக்கோ காயம்ஏற்படவில்லை. சிலுவையிலிருந்த உருவம் சற்றுச் சிதைந்தது. அன்றிலிருந்து அதன்மேல் அவனுக்கு அதிகபற்று. அதற்கு ஏதோ மாந்திரீகசக்தி இருக்கிறது எனக்கருதி அதனை இரவுபகலாய்த் தன்மேல் தரித்திருந்தான்.

பலமாதங்கள் கடந்தன. இவனால் காட்டிக்கொடுக்கப்பட்ட திருடன் ஒருவன் இவனைத் தாக்கினான். இருவரும் சிறிதுநேரம் கைகலந்தனர். அந்த அந்நியன் இவனை ஒருவாளால் கடுங்காயப் படுத்திச்சென்றான். இம்முறைஇவன் தப்பமுடியவில்லை. காயத்தின்வேதனையைத் தாங்கமுடியாமல் கீழேவிழுந்தான். அப்பொழுது கிறீஸ்துவன் ஒருவன் அவ்வழியே சென்றுகொண்டிருந்தான். திருடனின் அபயக் குரலைக்கேட்டு அவனண்டைசென்று கவனித்தான். இன்னும் மூச்சுஇருந்தது பாதையினோரம் அவனைத் தூக்கிச்சென்று, இரத்தம்வருவதை நிறுத்துவதற்தாக அவனது சட்டையைக் கழற்றினான். அவனது கழுத்தில் தொங்கிய பாடுபட்ட சுருபத்தைப் பார்த்ததும் திகைத்து, "நீ கிறீஸ்துவனா?" என வினவினான். "இல்லை" என்றான் திருடன். அந்தச்சமயம் திருடர்கள்பலர் அங்கு வந்தார்கள். காயப்பட்டுக் கிடந்தவன் தங்களில் ஒருவனென அவர்கள் கண்டார்கள். கண்டதும், அவனுக்கு உதவிசெய்வதா அல்லது அப்படியே விட்டுச்செல்வதா எனக் கூடிப் பேசினர். கடைசியாக அவனைத் தூக்கிச்சென்று ஒருபாதுகாப்பான இடத்தில் விட்டுப்போகத் தீர்மானித்தார்கள். அவர்கள் பாடுபட்ட சுருபத்துக்கு அவசங்கைசெய்வார்கள் எனப்பயந்த அந்தகிறீஸ்துவன், பயமின்றிக் காயம்பட்டவனுடன் சென்றான். வெகுசிரமத்துடன் காயம்பட்டவனை ஓர்குடிசைக்கு அவர்கள் தூக்கிச்சென்று அங்கிருந்த கட்டிலில் கிடத்திவிட்டுப் போயினர்.

காயம்பட்டவன் கிறீஸ்துவனை ஏறெடுத்துப் பார்த்தான். முடிவு சமீபித்து விட்டது. நடுங்கியகரத்தால் பாடுபட்டசுருபத்தைச் சுட்டிக்காட்டி "அது என்ன? எனக்கு எடுத்துச் சொல்" என்றான்.

நல்ல சமாரித்தனை அந்தக்கிறீஸ்துவன் தான் அறிந்தஅளவு எடுத்துக் கூறினான். "அதில் தொங்குகிறவர் கிறீஸ்துநாதர், கடவுளுடைய குமாரன். அவர்நம்மை அளவுகடந்தவிதமாய் நேசித்தார். அதனால்தான் நம்மை மீட்பதற்காகப் பரலோகத்திலிருந்து இந்தஉலகுக்குவந்து பாடுபட்டு உயிர்விட்டார்......"

திருடன் கண்களை அகலத்திறந்து கவனமாய்க்கேட்டான். இரத்தமும், வியர்வையும் காயம்பட்ட அவனுடைய முகத்திலிருந்து வடிந்துகொண்டிருந்தன. "கடவுள் அளவற்ற இரக்கமுள்ளவர். எவ்வளவு பெரிய பாவியாய் இருந்தாலும் மன்னிப்புக்கேட்டால் கொடுக்கத் தயாராய்இருக்கிறார்" எனக் கிறீஸ்துவன் கூறுகையில் திருடன் இமைகொட்டாது அவனையே நோக்கினான். ஞானஸ்நானத்தின் அவசியத்தைப்பற்றி அவன் சுருக்கமாக எடுத்துரைத்ததும், திருடன் "தயவுசெய்து எனக்கு ஞானஸ்நானம் கொடு" என்றான்.

உடனே நெற்றியில் தண்ணீர் ஊற்றிச்சிலசாதாரண ஆனால், வெகு வல்லமையுள்ளவார்த்தைகளை அந்த நல்லசமாரித்தன் உச்சரித்தான். சில நிமிஷங்களுக்குப்பின், இருபதாம் நூற்றாண்டின் நல்லகள்வனான அந்தக் கொள்ளைக்காரன் பாடுபட்ட சுருபத்தைக் கையிற் பிடித்திருக்கையிலேயே அவன்ஆத்துமம் தன்சிருஷ்டிகரிடம் பறந்துசென்றது.

யேசு நாம் ஒவ்வொருவரும் அப்போஸ்தலர்களாக வேண்டுமென்று ஆசிக்கிறார். அப்போஸ்தலர் என்பதற்குத் தூதுவர்என்று பொருள்படும். ஓர்நாட்டின் அல்லது மன்னனின் பிரதிநிதியே தூதுவர். ஆம், மேலோக, பூலோக இராசனின் தூதுவர்களாயிருக்க நம்மையழைக்கிறார்.

ஒருஉடம்பில் அநேகபகுதிகள் உள்ளன. அவை தலை, கண், காது, மூக்கு முதலியன. நம் உறுப்புகள் எல்லாம் ஒன்றோடொன்று சேர்ந்து உழைக்கின்றன. சாப்பாட்டுநேரத்தில் கை உணவைஅள்ளி வாயில் வைக்க நாம் சாப்பிடுகிறோம். நமது உறுப்புகளில் சிறந்தது தலையே.

நாம் சத்திய திருச்சபையின் அங்கத்தினர்கள். நமது திருச்சபை ஒரு அற்புத உடல். நாம்அதன் உறுப்புகள். நாம் ஒவ்வொருவரும் ஒருகுறிப்பிட்ட வேலைசெய்ய வேண்டும். யேசு ஞானஉடலின் தலை. நாம்தலையோடு சேர்ந்துஒத்துழைத்தால் திருச்சபை செழித்து வளரும். யேசு நமக்குக் கொடுக்கும் வேலையைச் சரிவரச் செய்வதே நமது முதற்கடமை. மற்றவர்களும் இந்த ஞானஉடலோடு சேர்ந்து பயன்பெறச் செய்தால் நாம் அப்போஸ்தலர்களென்று அழைக்கப்படுவோம்.

— க. பிரதிநிதி

## தாண்டவன்வெளித் தபால்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வீதிவழியே நடந்து ஆலயமுன்றிலில் கல்வாரிமலைக் காட்சியைப்போல் சிருஷ்டிக்கப்பெற்றிருந்த திருச்சிலுவையின் முன்வந்ததும் பிழைதீர்க்கும்மந்திரம் சொல்லப்பட்டது. அதன்மேல் வண. ரி. செல்வராஜ்சுவாமியவர்களால் இனியதமிழ்நடையில் "இவ்வழியே செல்லும் சனங்களே சற்றுநில்லுங்கள்; இத்தாயின் வியாகுலத்துக் கீடான வியாகுலமுண்டோ எனச் சிந்தித்துப்பாருங்கள்" என்னும் முகவுரையின்கீழ் திவ்வியயேசுமொழிந்த ஏழுதிருவாக்கியங்களும் பொதிந்த அரியதோர்பிரசங்கம் செய்யப்பெற்றது. அதன்மேல் திவ்வியநற்கருணை ஆசீர்வாதமும், திருச்சிலுவை ஆசீர்வாதமும் அருளப்பெற்று வியாகுல அன்னையின் திருஅருளினை இரந்து யாவரும்மீண்டனர்.

பரிசுத்தவியாகுலத்தாயே! உமது பாதுகாவலின்கீழுள்ள எங்கள்சுவாமியவர்களையும், பங்குக்கிறீஸ்தவர்களையும் சிலுவையின்பாதையில் வழிநடத்தி மோட்சகரை சேரச்செய்தருளும்.

—நிருபர்.

## ருஷியாவுக்குக் கிறீஸ்துவேதம் திரும்பும் காலத்துக்கு......

தென்னமெரிக்காவிலே பிறேசில் நாட்டிலுள்ள ஓர்கீழைத்தேச திருச்சடங்குமுறைச்சபையில் ஓர் ஆங்கிலேய யேசுசபைக் குருவான வண. பிறெடெறிக் வில்கொக்சுவாமியாரும் ஒருவராய் இருந்துவருகிறார். இந்தச் சபை அங்குள்ள பாவனையற்ற ஆசீர்வாதப்பர்சபை மடாலயம் ஒன்றிலே ருஷியபிள்ளைகளுக்குக் கல்விபயிற்றி வருகின்றது. இந்தச்சபையார் சோவியற்ருஷியாவுக்குக் கிறீஸ்துவேதம் திரும்பச்செல்லும் காலத்துக்கெனப் பிள்ளைகளைத் தயாரித்துவருகின்றனர். வண. வில்கொக்சுவாமியார் யுத்தத்துக்குமுன் கீழைத்தேச திருச்சடங்குமுறையில் சேர்ந்துகொள்ள அனுமதிபெற்று அநேகவருடகாலமாக நியூயோக்நகரிலுள்ள போர்டாம் யேசுசபைச் சர்வகலாசாலையின் ருஷியநிலையத்தில் பணியாற்றிவந்தார்.

மஞ்சூரியாவிலிருந்தும், சீனவிலிருந்தும் ருஷியர்கள் வெளியேறுவது சம்பந்தமாய் இருந்துவந்த கட்டுப்பாடுகளைத் தளர்த்தியதிலிருந்து பிறேசில் நாட்டிலே வெள்ளப்பிரவாகம்போன்று சரிந்துகொண்டிருந்த ருஷிய அகதிகளைக் கவனிப்பதிலே துணைச்செய்யுமாறு சுவாமியார் அந்நாடுசென்றார். அங்கே ருஷியபிள்ளைகளுக்கென்று ஓர்விடுதிப்பாடசாலையாக உபயோகிக்கும்படி ஆசீர்வாதப்பர்சபைச் சந்நியாசர்கள் தங்கள் பாரியமடாலயம்ஒன்றை வாடகையில்லாமலே ஒருதொகைவருடங்களுக்குச் சபையாருக்கு விட்டுக்கொடுத்தார்கள். ஐக்கிய அமெரிக்க தேசத்திலிருந்து பெருந்தொகையாக வழங்கப்பட்ட நன்கொடைகளைக் கொண்டு அவர்கள் பாடசாலைக்குவேண்டிய தளபாடங்களைத் தேடிக்கொண்டதுடன் அமெரிக்க பரோபகாரிகளால் வழங்கப்பெற்ற வித்தியாவெகுமதிகளைக்கொண்டு அதில்பிள்ளைகளையும் சேர்த்தார்கள்.

பிறேசில்நாடு போய்ச்சேர்ந்த ருஷிய அகதிகளின் குடும்பங்கள் ருஷியாவைக் கம்யூனிஸ்தர்கள் அடிப்படுத்தியபோது மஞ்சூரியாவுக்குத் தப்பியோடியவைகளாகும். ஆனால், ருஷியாவுடன் சீனா யுத்தத்தில்இறங்கியபோது இவற்றில் அநேககுடும்பங்கள் சைபீரியாவுக்கு நாடுகடத்தப்பட்டன. எஞ்சியகுடும்பங்கள் சீனவுக்குத்தப்பியோடின.

"உலகின் மகாப்பெரும் பிரச்சினைகளில் இரண்டு கம்யூனிஸமும், கிறீஸ்தவர்களின் ஐக்கியமின்மையுமே; இவைகளே ருஷியர்களை இன்றுவெகுவாகப் பாதிக்கின்றன; சிறந்தகிறீஸ்தவகல்வி பயிற்றியபின் இந்த ருஷியபிள்ளைகள் தங்கள் உடன்ருஷியர்களிடையேயுள்ள இந்தப்பிரச்சினைகள் இரண்டையும் தீர்த்துவைப்பதற்குச் சிறந்தகருவிகளாய் நம்முடன் இருப்பார்கள்; இவர்களிற்சிலர் ஓர்நாள் குருமாராகவும், சாமானிய கத்தோலிக்க அப்போஸ்தலர்களாகவும், முன்மாதிரியான பெற்றோராகவும் தங்கள் தேசத்துக்கு வேதவிசுவாசத்தைத் திரும்பவும்கொண்டுபோகலாம்" என்று வண. வில்கொக்சுவாமியார் கூறுகின்றார்.

## மதிப்புரை

### ஈழமுரசு

ஆசிரியர் — இராவணன்

விலை — சதம் 15.

இன்று நம்நாட்டில் நல்லாசு நடக்கின்றதா? நாம்பெற்றசுதந்திரம் நிலைத்துநிற்குமா? சனநாயகநாட்டில் அரசியல் எவ்வாறிருத்தல் வேண்டும்? பொதுமக்கள் அரசாங்கத்தை வழிநடத்துவதெப்படி? என்பனபோன்ற அரிய சிந்தனைகளைத் தூண்டுமுகமாகவும், தமிழறிவைப் பரப்புமுகமாகவும் அரிய கட்டுரைகள் பலதாங்கி 'ஈழமுரசு' என்னும் செய்தித்தாள் வெளிவந்துள்ளது.

'ஆபத்துவருகிறது, விழித்தெழுங்கள்' என்று முரசுமுழங்குவதோடு 'நல்லதுசெய்யக் காலம்வந்துவிட்டது' என்றும் அது அறிவிக்கின்றது. பாஷைப்பிரச்சினை, வேலையில்லாத் திண்டாட்டம், பொருளாதாரவீழ்ச்சி ஆகியாம் சிக்கல்களைத்தீர்ப்பதோடு நாஸ்திகத்தோடும் நாம்போராடவேண்டியகாலம் சமீபித்துவிட்டதென்று முரசு நமக்கு இடித்திடித்து முழக்குகின்றது. அத்தோடு நம்தமிழ்மொழியின் வளர்ச்சியையும் கருத்திற்கொண்டு அரியஇலக்கியப்பணியும் புரியமுன்வந்துள்ளது.

அடுத்தஇதழில் "மனிதனின் பொருளாதார அரசியல்வாழ்க்கை" என்ற ஆங்கிலநூலின் தமிழாக்கமும், நேயர்களின் வினுக்களுக்குப்பதிலும் புதிய அம்சங்களாக விளங்குமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஈழமுரசு அரசியல் வானிலே என்றும்நிலைத்துநின்று முழங்கி நம்செல்வநாட்டைச் சகல பொல்லாப்புகளினின்றும் காப்பதாக. எமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றி கூறுகின்றோம்.

---

### நன்றியறிந்த தோத்திரம்

யேசுவின் திருஇருதயஇரத்தத்தாலும், பரிசுத்த சதாசகாயமாதாவின் சலுகையினாலும் நான்நோய்நீங்கிப்பூரணசுகம்பெற்றிருப்பதால் எனதுநன்றியைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாதாவின் அடியாள், என். ஏ. ஜி.

* * *

### நேர்த்தியின் பூர்த்தி

பரிசுத்த சதாசகாயமாதா, அர்ச். பத்தோம் பத்திநாதர், அர்ச். சின்னத்திரேசம்மாள் ஆகியோரிடம் நான் இரந்துகேட்ட மன்றாட்டுக் கிடைக்கப்பெற்றேன். நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறேன்.

ஜி. எஸ்.

பருத்தித்துறை

---

● அமெரிக்க, ஆங்கிலயாத்திரிகர்களின் கோஷ்டிஒன்றுக்குப் பரிசுத்த பிதா சமீபத்தில்அளித்த பேட்டிஒன்றிலே தற்சமயம்அவர்களின் பாஷையைத் தாம்கற்றுவருவதாகவும், ஆங்கிலபாஷைபேசும் தரிசகர்களை மொழிபெயர்ப்பாளர்இல்லாது தாமேநேரில் அவர்களின் சொந்தப்பாஷையிலேயே வேற்றுப் பேசத்தக்கதாய் விரைவிலே அதனைநன்குகப் பேசக்கூடுமெனத் தாம்நம்புவதாகவும் தெரிவிக்கலாயினர்.



### நோய்களின் விபரம்

நீரிழிவு, சன்னி, தொய்வு, இஸ்தேறியாவாய்வு, காசம், குன்மம், காயாசுவாதம், உருக்குநோய், புற்றுநோய், கெற்பச்சிதைவினால் ஏற்படும்ரோகங்கள் முதலியனவற்றிற்குச் சிகிச்சை பெற எம்மிடம் கலந்து ஆலோசியுங்கள்.

உங்கள் சுகவாழ்வே எமது சேவையின் இலட்சியம்.

## புத்தக மதிப்புரை

### இளங்கதிர்

தமிழ்ச்சங்கம்

இலங்கைப் பல்கலைக்கழகம்

1958—1959

மொழியையும், பண்பாட்டையும் சர்வகலாசாலைகளும், ஆராய்ச்சிக்கழகங்களும் வளர்ச்சியுறச் செய்துவருதல் கண்கூடு. தமிழ்நாட்டில்அண்ணுமலைச் சர்வகலாசாலை தமிழ்மொழிக்குச் செய்துவரும்தொண்டுகள் அனைவரும் அறிந்ததே. எங்கள்நாட்டில் தமிழ்ச் சர்வகலாசாலை ஒன்றில்லாதது நமது தவக்குறைவென்றே சொல்லவேண்டும். இந்நிலையை நன்குணர்ந்து இலங்கைச் சர்வகலாசாலைப் பேராசிரியர்களும், தமிழ்மாணவர்களும் அரசாங்கத்தின் உதவியை நம்பியிராமல் தங்கள் அயராவூக்கத்தால் தமிழ்த்தொண்டு செய்துவருகிறார்கள். அவர்கள் நாட்டிய தமிழ்ச்சங்கம் நாளொருவண்ணமும், பொழுதொருமேனியுமாக வளர்ச்சிபெற்று வருகின்றது. தமிழ்ச்சங்கத்தின் தலைசிறந்தவெளியீடாக "இளங்கதிர்" வெளிவருகின்றது.

முச்சங்கத்தின் நினைப்பையூட்டும் விழி, ஏடு, யாழ்என்றவிருதுகளோடும், 'செந்தமிழ்த்தாயே உன்னைச் சிந்தையில்மறவோம்'என்ற திடசங்கற்பத்தோடும், தமிழ்ப்பெருந்தலைவர் 'ராஜாஜி' அவர்களின் ஆசியுரையோடும், நல்லறிஞர்களின் வாழ்த்துரைகளோடும், ஈழத்தமிழர்களின் வாழ்க்கையில் காரிருள்படர்ந்த இக்கலக்ககாலத்திலே அவர்களின் வாழ்க்கைப்பாதைக்கு வழிகாட்டும் ஒருகலங்கரை விளக்கபோலவும், காரிருளைக் களைய விரைந்துவரும் உதயசூரியன் போலவும் "இளங்கதிர்" கலைக்கதிர்களோடு வெளிவந்துள்ளது.

இவ்விளங்கதிரை அலங்கரிப்பதில் சர்வகலாசாலைப் பேராசிரியர்கள் பெரும்பங்கெடுத்துள்ளனர். எழுத்துகருவிகளின்வளர்ச்சிகுறித்துத்தமிழ்த்துறைத்தலைவரும், பேராசிரியருமாகிய க. கணபதிப்பிள்ளையவர்கள் வரலாற்றுமுறையாக ஆராய்கிறார்கள். புவியியல் அறிஞராகிய பேராசிரியர் கா. குலரத்தினம்அவர்கள் யாழ்ப்பாண நில அமைப்பைக்குறித்து விஞ்ஞானரீதியில்விளக்கந்தருகிறார்கள். கலாயோகி வி. செல்வநாயகம்அவர்கள் கவிதையச் சுவைக்குமுறைபற்றி மாணவர்களுக்கு அறிவுரை பகர்கிறார்கள். கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள் நாடகத் தமிழ்வளர்ச்சியின் வரலாற்றைக் காட்டுகிறார்கள். தமிழ்த்தூதுநடாத்திப் பிறநாடுகளில் தமிழ்ப்பண்பாட்டின் மகிமைபெருமைகளை விளக்கிவரும், சிறந்தகலாரசிகருமாகிய அறிஞர் தனிநாயக அடிகளாரின் "ஒற்றுமை அமெரிக்கா" என்ற பிரயாணக்கட்டுரையும், "கோவலன் — சோகநாடகத்தின் தலைவன்" என்ற இலக்கியத்திறனாய்வுக் கட்டுரையும் இளங்கதிருக்குத் தனியழகுதந்து மிளிர்கின்றன.

### நேர்த்தியின் பூர்த்தி

பாவியாகிய அடியேன் பரி. சதாசகாய மாதாவையும், (ஆரோக்கிய மாதாவையும்), (செபமாலைமாதாவையும்) எனக்குவந்த ஆபத்தினின்று காப்பாற்றும்படி வேண்டினேன். என்னஅற்புதம் காத்திராப்பிரகாரம் எனதுமன்றாட்டு அநுகூலமானது. தாயாரின்நாமம் என்றும்புகழப்படுவதாக. நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறேன்.

எஸ். பி. யோசெவ்

சிங்கப்பூர்.

---

● கல்கத்தாவைச் சேர்ந்த புத்தலாமா — அதாவது புத்தகுருவான கனம். சிமெட் ருக்டிசின் சமீபத்திலே வத்திக்கான்மாளிகைசென்று பாப்பாசரின் விசேஷபேட்டிபெறலாயினர். அப்போதுஇவர் தமது பாரம்பரியமான குருஅங்கிகளைத் தரித்திருந்தார். இந்தியகத்தோலிக்க குருத்துவமாணவர்கள் மூவர்சமேதராய் இவர்பாப்பாசர் சமூகஞ்சென்றார். பேட்டியின்போது அவர்களேஇவருக்கு மொழிபெயர்ப்பாளராய் இருந்தார்கள்.

● ஹங்கேரியதிருச்சபை மேலதிகாரியும், தற்போது அங்கே புடாபெஸ்ற் தலைநகரிலுள்ள அமெரிக்கதூதுவராலயத்தில் அடைக்கலம் புகுந்திருப்பவருமான கருதினல் மின்ட்சென்றிஆண்டவரின் முன்னைநாள் காரியதரிசியான வண. எகோன் ரேர்ச்சன்யிசுவாமியார் அங்கு ஓர்சிறைச்சாலையில் காலஞ்சென்றாரெனக் "காத்பிறெஸ்" என்ற ஆஸ்திரிய கத்தோலிக்கசெய்திஸ்தாபனம் தெரிவித்திருக்கின்றது.

● அயர்லாந்திலே சென்ற 1958-ம் ஆண்டில் 401 ஐரிஷ்குருத்துவமாணவர்கள் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றார்கள். ஆனால், இவர்களில் 91 பேர்மாத்திரமே அந்நாட்டிலுள்ள ஐரிஷ்மேற்றிராசனங்களில் தொண்டாற்றிவர, ஏனையோரெல்லாம் மிஷனரிமாராகப் பிறநாடுகளுக்குச் சென்றிருக்கிறார்கள். தற்போது 3,173 ஐரிஷ்மாணவர்கள் குருப்பட்டத்துக்குப் படித்துவருகின்றார்கள்.

---

இன்னும், சிறுகதைகளும், புத்துக்குநவியல்களும், கவியரங்குகளும், நகைச்சுவைக் கட்டுரைகளும் இளங்கதிரை அணிசெய்துநிற்கின்றன. இக்கட்டுரைகள் பல்கலைக்கழகமாணவர்களின் அறிவுநுட்பத்தையும், ஆராய்ச்சித்திறனையும், தமிழ்ப்பற்றையும் எடுத்துக்காட்டும் சின்னங்களாக விளங்கும் என்பதை எவரும்மறுக்கமுடியாது. இத்தகைய பல அறிவுக்கதிர் வீசும் "இளங்கதிரை"த் தமிழ்நாட்டுக்கு அர்ப்பணித்த தமிழ்ச்சங்கத்தாருக்கும், சிறப்பாக அதன்மலராசிரியர்க்கும் எமதுபாராட்டு உரியதாகுக. நமக்கு அனுப்பிய அன்பளிப்புக்காக நன்றி கூறுகின்றோம்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, April 9 -1959.